வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 16.05.2022 திங்கட்கிழமை | இதழ் : 161 | பக்கங்கள் : 16

# போரில் இறந்த யாரையும் நினைவேந்த தடையில்லை!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



கொழும்பு, மே 16

"நாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் எவற்றுக்கும் தடையில்லை. போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. அதை எவரும் தடுக்க முடியாது", என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

## பிரதமர் ரணில் இன்று உரை!

கொழும்பு, மே 16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார். நாட்டின் 26ஆவது பிரதமராக பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றும் முதல் உரை இதுவாகும்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியின் உண்மை தன்மை, நெருக்கடியை தீர்த்து வலுவான நாட்டை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் தனது உரையில் வெளிப்படுத்துவார் என்று அவரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி பிரதமருக்கு ஓர் அக்கினி பரீட்சை!

### தமிழ்த் தேசியக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், மே 16

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது புதிய பிரதமருக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கும். அதில், அவர் தேறுவதோ அல்லது தவறுவதோ தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் - என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த அறிக்கையில், "பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கி சிறைப்பட்டிருக்கும் சூழ்நிலையில், 15

## ரணில் அரசு அமைப்பதற்கு சுதந்திரக் கட்சியும் ஆதரவு



கொழும்பு, மே 16

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை அமைப்பதற்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு அளிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மைத்திரிபால சிறிசேன எழுதி 15

## மஹிந்த வெளிநாடு செல்ல இராஜதந்திரிகள் யோசனை?

கொழும்பு, மே 16

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறும் யோசனையை வெளிநாட்டு இராஜதந்திரிகளே முன்வைத்தனர் என்று சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அதில், திருகோணமலை கடற்படைத் தளத்தில் படையினரின் பாதுகாப்பில் இருந்த போது 15

## மே 18 நினைவேந்தல் பிரசுரம் மெல்பர்ன் பேராட்டத்தில் கிழிப்பு!


மெல்பர்ன், மே 16

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் ஆர்ப்பாட்டத்தில் விநியோகிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் துண்டுபிரசுரம் பெரும்பான்மை இனத்தவர் ஒருவரால் கிழித்தெறியப்பட்டது.

இந்தச் சம்பவம் மூவின மக்கள் வாழும் - இனவெறியற்ற இலங்கைக்காக போராடுகிறோம் என்ற விடயத்தை அவமதிப்பதாகவும் - அவ்வாறு போராடுவோரின் முகத்திரைகளை கிழிப்பதாகவும் அமைந்துள்ளதாக புலம்பெயர் 15

## நிபந்தனைகளை ஏற்றாலே அமைச்சு பதவி பெறுவேன்!

### விக்னேஸ்வரன் எம். பி. விளக்கம்



யாழ்ப்பாணம், மே 16

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட எனது மூன்று நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே நான் அமைச்சுப் பதவியை பெறுவது குறித்து பரிசீலிப்பேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக் 15

## எரிவாயுவுடன் இரு கப்பல்கள் இந்த வாரம் கொழும்பு வரும்!

கொழும்பு, மே 16

எரிவாயுவுடன் இன்று காலை ஒரு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இதேசமயம், இந்த வாரம் மற்றொரு எரிவாயு கப்பலும் நாட்டை வந்தடையவுள்ளது.

இன்றைய தினம் கப்பல் வந்ததும் உடனடியாக இறக் 15

## டீசலுடன் கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, மே 16

இந்திய கடன் வசதி திட்டத்தின் கீழ் டீசல் தாங்கிய கப்பல் ஒன்று நேற்று கொழும்பை வந்தடைந்தது. இந்திய கடன் உதவியில் இலங் கைக்கு எரிபொருளுடன் வந்த 12ஆவது கப்பல் இதுவாகும்.

ரோர்ம் எல்வின் நிறுவனத்தின் ஊடாக இந்த 15

## கோட்டா கோ கம நூலக எரிப்பு யாழ். நூலக எரிப்புக்கு ஈடானது!

### சிங்கள வார இதழ் தெரிவிப்பு

கொழும்பு, மே 16

கோட்டா கோ கம போராட்ட களத்தில் அமைக்கப்பட்ட நூலகம் மஹிந்த ஆதரவு குண்டர்களால் எரிக்கப்பட்டமை அன்றைய யாழ். நூலக எரிப்புக்கு ஈடானது என்று 'தேசய' சிங்கள வார ஏடு தெரிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை பதிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் வாராந்த அரசியல் கட்டுரையில், கடந்த திங்கட் கிழமை மஹிந்த ஆதரவு குண்டர்களால் நடத்தப் 15

## கொழும்பில் பாதுகாப்பு உச்சம் 1,000 பொலிஸாருக்கு அழைப்பு!

கொழும்பு, மே 16

நாளை முதல் வெள்ளிக்கிழமை வரை கொழும்பின் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக ஆயிரம் பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள், வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் விசேடமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைக்கப்பட்ட பொலிஸார் இன்று கொழும்பை வந்தடைவர். 15

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK



## இப்படியும் நடக்கிறது...!

ஒருவர் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராக பணியாற்றும்போது அவர் தனது பெயருக்கு முன்னால் பேராசிரியர் என்று குறிப்பிடுவது வழக்கமானது.

ஆனால், அவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவ்வாறு குறிப்பிடுவது வழக்கமானது அல்ல. அதிகம் ஏன், அப்படி குறிப்பிடுவது தவறு.

ஆனால், அவர் ஒரு பல்கலைக்கழகத்தில் வாழ்நாள் பேராசிரியராக கௌரவிக்கப்பட்டால் அவர் வாழ்நாள் முழுவதும் தனது பெயருக்கு முன்னால் அதனை பயன்படுத்தலாம்.

உதாரணமாக, நமது பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளைபோல.

ஆனால், கலாநிதிப் பட்டம் பெறாமலே பல்கலைக்கழகத்தில் பேராசிரியரான சிலரும்கூட, ஓய்வுபெற்ற பின்னரும் தமது பெயருக்கு முன்னால் பேராசிரியர் என்பதை இன்றுவரை சேர்த்துக்கொண்டிருப்பதையும் நாம் காணவேண்டிய நிலை. அது வேறு சங்கதி.

அதேபோலத்தான், உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்த ஒருவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் தனது பெயருக்கு முன்னால் நீதியரசர் என்று போட்டுக்கொள்ளலாம்.

இலங்கையில் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி, அவர் பதவியிலிருந்து மக்களால் தூக்கியெறிப்பட்டாலும் வாழ்நாள் முழுவதும் தனது பெயருக்கு முன்னால் ஜனாதிபதி என்றே பாவிக்கலாம் என்று, அரசியலமைப்பிலேயே எழுதிச் சென்றார் சர்வவல்லமை பொருந்திய முதலாவது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன.

இனி விசயத்திற்கு வருவோம், நேற்று முழுவதும் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டது, நமது நீதியரசர் விக்கினேஸ்வரன் பற்றிய விவகாரம்தான்.

நிபந்தனைகளின் அடிப்படையில் ரணில் அமைச்சரவையில் அமைச்சர் பதவியையும் ஏற்கவிருப்பதாக அவர் சொன்ன தகவல், நம்மவர்களை உசுப்பேத்திவிட்டிருந்ததை காணமுடிந்தது.

நிபந்தனைகளின் அடிப்படையில் என்று அவர் சொல்லியிருந்தாரே தவிர, அது என்ன நிபந்தனை என்று அவர் சொல்லாத போதிலும், அவர் அமைச்சரவையில் சேருகின்ற விடயத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் பலரும் தத்தமது விருப்பு வெறுப்புக்களை கொட்டித் தீர்த்தனர்.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்து ஓய்வுபெற்று, பிரேமானந்தாஜியின் போதனைகளை பரப்பிக்கொண்டிருந்த ஒருவரை அரசியலுக்கு அழைத்துவந்தது யார் என்பது இங்கே எழுதித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

ஆரம்பத்தில் அவரது வருகையை எதிர்த்த சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களும் பின்னர் வேறுவழியில்லாமல் அவரை ஆதரிக்கவேண்டி வந்ததும் அரசியலுக்கு வருவதற்கு அவர் விதித்த நிபந்தனைகள் தாம்.

அதாவது, அனைத்துத் தரப்பினரும் ஒருமித்து கோரிக்கை விடுத்தால் மாத்திரமே முதல்வர் வேட்பாளராக களம் இறங்குவேன் என்ற அவரது நிபந்தனையை அனைத்து தரப்பினரும் அதாவது, அப்போது கூட்டமைப்பில் அங்கம் வகித்த அனைத்துத் தரப்பினரும், 'ஏகோபித்த குரலில் கோரிக்கை விடுத்தால் மட்டுமே' என்ற அவரது கோரிக்கையை,
விருப்பமில்லாமலும்கூட, ஏகோபித்து கோரினார்கள்.

அவரும் வேட்பாளராகி முதல்வரானதும், தன்னை தமிழரசின் பிரதிநிதியாக மாத்திரம் அடையாளப்படுத்த நினைத்தது மாத்திரமன்றி, தான் மற்றைய போராட்டக்குழுக்களின் பிரதிநிதி அல்ல என்றும் பகிரங்க அறிவிப்புச் செய்தார். (பின்னர் ஈபிஆர்எல்எவ் என்ற போராட்டக்குழுவின் பெயரை மாற்றி, அதன் மூலமே பாராளுமன்றம் போகநேர்ந்தது வேறு கதை.)

அதற்கு காரணம் என்ன? பின்னர், தன்னை முதலமைச்சர் வேட்பாளராக்குவதற்காக, வேட்பாளராகும் தனது விருப்பத்தையே விட்டுக்கொடுத்த மாவை சேனாதிராசாவை, பிற்காலத்தில் அவர் ஏன் கேவலப்படுத்தினார் என்பதும் விசயமறிந்தவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதிகள்.

அதுபற்றி பிறிதொரு நாளில் விரிவாக பேசலாம்.

இப்போது, அவர் அமைச்சராகலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கின்றது, அவரது நிபந்தனைகளை ரணில் ஏற்றுக்கொண்டால்.

முதலமைச்சராக இருக்கும்போது பிரதமராக இருந்த ரணிலை 'பொய்யர்' என்று வர்ணித்தவர் அவர், இப்போது, அந்தப் பொய்யரின் தலைமையில் பணியாற்ற வேண்டியிருக்கும்.

அரசுடன் சேர்ந்து இயங்குபவர்களை இனத்தின் துரோகிகள் என்று வர்ணித்த டக்ளஸ் போன்றவர்களுடன் பணியாற்றவேண்டியிருக்கும்.

அவரை நவீன தேசியத்தலைவர் என்று புகழ்ந்து பேசிய ஒரு சில புலம்பெயர் குழுக்களினால் அவரும் ஒட்டுக்குழுவாக 'போற்றப்பட' வேண்டியிருக்கும்.

இதையெல்லாம் பொறுத்துக்கொண்டு அவர் அமைச்சராக பணியாற்றினாலும், ஆகக்குறைந்தது அந்த அரசியல் கைதிகளையாவது விடுவிக்க முடிந்தால் அவர் அமைச்சரானதன் பலனை தமிழ் மக்கள் அடையமுடிந்ததாக சந்தோஷப்படலாம்.

ஆனால், இன்னும் சில மாதங்களில் நடக்கும் தேர்தலின் பின்னர் அவர் காணாமல் போய்விடுவார். அதன் பின்னர் அவர் முன்னாள் அமைச்சர் என்று வேண்டுமானால் போட்டுக்கொள்ளலாம். ஏனெனில், அமைச்சர் ஒருவர் அந்தப் பதவியில் இல்லாமல் போனபின்னரும் அமைச்சர் என்று பாவிக்கலாம் என்பது அரசியலமைப்பில் இன்னமும் சேர்க்கப்படவில்லையே!

**- ஊர்க்குருவி**



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பருத்தித்துறை முனையில் அஞ்சலி!

வடமராட்சி, மே 16

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நேற்று பருத்தித்துறை முனை கடற்கரையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஏற்பாட்டில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 4 மணிக்கு உயிர்நீத்தோருக்காக இரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமான அஞ்சலி நிகழ்வில், ஈகைசுடரை முன்னாள் போராளி ஜெயராஜ் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நகர சபை தவிசாளர் இருதயராசா, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான சி.தியாகலிங்கம், சி.பிரசாத், காந்தன், கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் ப.நிலாங்கதன், பருத்தித்துறை மூலக்கிளை உறுப்பினர் சாமியப்பா, பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் நவரத்தினம், மற்றும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் ஆதரவாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேசமயம், அஞ்சலி நடத்தப்பட்ட இடமருகே அதிகளவு பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. (ஐ- 2)

## சண்டிலிப்பாயில் வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்றையதினம் நுங்கு வெட்டுவதற்காக வெற்றுக் காணி ஒன்றுக்குள் சென்ற இளைஞர்கள் சிலர் இந்த வெடிபொருட்களை கண்டு பொலிஸாருக்கு தெரிவித்தனர்.

நீதிமன்ற அனுமதியின் பின்னர் குறித்த வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருட்களுள் கைக்குண்டு ஒன்று, கண்ணி வெடி ஒன்று மற்றும் தோட்டாக்கள் என்பன உள்ளடங்கும். (ஐ-3)

## வெற்றிலைக்கேணி கொலை; சந்தேகநபர் பொலிஸில் சரண்!

வடமராட்சி, மே 16

வடமராட்சி கிழக்கில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வெற்றிலைக்கேணியில் சடலம் ஒன்று புதைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸார் குறித்த இடத்தை நீதிவான் முன்னிலையில் கடந்த புதன்கிழமை தோண்டி சடலத்தை மீட்டனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இராசன் சிவஞானம் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில், கடந்த 12ஆம் திகதி சந்தேகநபர் சட்டத்தரணியுடன் சென்று பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இவர் அன்றைய தினமே கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை குடும்பத் தகராறு காரணமாகவே ஏற்பட்டது என்றும், சரணடைந்தவர் கொலையானவரின் மனைவியின் சகோதரர் எனவும் அறியவருகின்றது. (ஐ)

## குமுதினி படகு படுகொலை; யாழ். பல்கலையில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், மே 16

குமுதினி படுகொலையின் 37வது நினைவேந்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் மாணவர்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

கடந்த 1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானற்கும் இடையே பயணித்த குமுதினி படகை வழிமறித்த கடற்படை பயணித்தவர்களை வெட்டிக் கொன்றது. இதில் 36 பேர் உயிரிழந்தனர்.

இந்தப் படுகொலையை நினைவுகூரும்முகமாகவே நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நினைவேந்தலை முன்னெடுத்தனர். (ஐ)



## பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் வெசாக்!

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே யின் ஏற்பாட்டில் வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பணிமனையில் வெசாக் தானம் வழங்கும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நிறைவில் மக்களுக்கு ஐஸ்கிறீம் வழங்கி வைக்கப்பட்டது.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பணிமனை மற்றும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் காரியாலயம் என்பன மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. அத்துடன், விசேட நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ஐ- 3)

ஈழநாடு
Eelanadu
16.05.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 2

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நம்பிக்கையில்லா பிரேரணை - ஒரு விஷப் பரீட்சை?

நாளை - 17ஆம் திகதி, ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முன்னணியில் நிற்கின்றது. ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென்னும் கோரிக்கையுடன் 'காலிமுகத்திடல்' போராட்டம் தொடரும் நிலையில், பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெறுமாக இருந்தால், அது ஜனாதிபதிக்கு மேலும் ஒரு தலையிடியாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியுற்றால் - என்ன நடக்கும்?

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றிருக்கும் நிலையில்தான், இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படுகின்றது. ஜனாதிபதி ஏற்கனவே புதிய நகர்வொன்றை மேற்கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதிக்கு எதிரான வாக்கெடுப்பில், அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிப்பார்களா? அதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? அதேவேளை கூட்டமைப்பினர் ஆதரிக்கும் விடயமொன்றை, விமல் வீரவன்ஸ அணியினர் ஆதரிப்பார்களா? இப்படியான பல கேள்விகளுக்கு மத்தியில்தான், நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் நம்பிக்கை வெளியிடப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டுமென்னும் நிலைப்பாட்டிலிருக்கும் எதிர்த்தரப்புக்கள் அனைவரும் ஆதரிக்கலாம். ஏனெனில், அவர்கள் இதனை பொதுவெளிகளில் முன்வைத்து வந்திருக்கின்றனர். ஆனால், அரசாங்கத்திலிருந்து வெளியேறி, சுயாதீனமாக செயல்பட்டுவரும் பாராளுமன்ற அணியினர் ஆதரித்தால் மட்டுமே, நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற முடியும். அவர்கள் இறுதி நேரத்தில் எவ்வாறான முடிவுகளை மேற்கொள்வார்கள் என்பதை ஊகிக்க முடியாது. ஒருவேளை பின்வாங்கவும் கூடும்.

அடிப்படையில் - இது ஒரு விஷப் பரீட்சைதான். அதாவது, ஜனாதிபதிக்கு மக்கள் மத்தியில் அதிருப்திகள் இருக்கின்றன. அவர் வெளியேற வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் சூழலில், நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியுறுமாக இருந்தால், அவர் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பது இலகுவாகும். அவரது இடம்பலமடையும். இதுவரை அவர்மீது முன்வைக்கப்பட்டுவந்த விமர்சனங்களை, தொடர்ந்தும் முன்வைக்க முடியாத சூழல் உருவாகும்.

இதேவேளை, கோட்டா வீட்டுக்கு செல்ல வேண்டுமென்னும் அடிப்படையில், முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டமும் பலவீனமடையும். நம்பிக்கையில்லா பிரேரணையின் தோல்வி, போராட்டத்துக்கான தர்க்கரீதியான நியாயத்தை கேள்விக்குள்ளாக்கும். அதாவது, பாராளுமன்றம் ஜனாதிபதியின்மீது, நம்பிக்கை வைத்திருக்கின்றபோது, அவரை எவ்வாறு வெளியேறுமாறு, வெளியிலுள்ள ஒரு குழுவினர் கோர முடியுமென்னும் பலமான வாதத்தை, ஜனாதிபதிக்கு ஆதரவான தரப்பினர் முன்வைக்கலாம்.

எனவே, நம்பிக்கையில்லா பிரேரணையென்பது, கவர்ச்சியான ஒன்றாக தெரிந்தாலும்கூட, அது ஆபத்தானதாகும். அதாவது, கத்தியில் நடப்பது போன்றது. இன்றைய சூழலில் கத்தியின் மேல் நடப்பது போன்ற அரசியல் விஷப் பரீட்சைகள், அடிப்படையில் வீழ்ந்துகிடக்கும் ராஜபக்ஷக்களுக்கு உத்வேகமூட்டுவதாகவும் அமைந்துவிடலாம். அரசியல் நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷ குடும்பம், தப்பித்துக் கொள்வதற்கான மரக்கட்டைகளை தேடிக் கொண்டிருக்கின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றால், அப்படியானதொரு மரக்கட்டை அவர்களுக்குக் கிடைக்கவும் கூடும்.

# விடுதலைப் புலிகள் குறித்த 'இந்து'வின் எச்சரிக்கை!

**அலசுவது இராஜதந்திரி**

இந்தியாவின் பிரபல ஆங்கில பத்திரிகையான தி இந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மீளவும் தம்மை ஒருங்கிணைத்து இலங்கையில் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடுகின்றனர் என்று இந்திய புலனாய்வுத் துறை தகவல்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்து பத்திரிகையின் தகவலில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் மே 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதன் பின்னணியிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தோர் இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இலங்கையில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வுத்துறை விடுதலைப் புலிகள் இலங்கையில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளனர் என்று கூறியுள்ளபோதிலும் இலங்கை பாதுகாப்புத்துறை இலங்கையின் புலனாய்வு தகவல்களை ஆதாரம் காட்டி விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இலங்கையில் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளது.

இதுவிடயத்தில் இந்திய மற்றும் இலங்கை புலனாய்வுத்துறையினர் எவ்வளவு தூரம் தமது புலனாய்வு தகவல்களை சரிவர ஆதார பூர்வமான முறையில் சேகரித்துள்ளனர் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இந்திய புலனாய்வுத்துறையின் கடந்தகால எச்சரிக்கைகளில் அநேகமானவை பலிதமாகியிருந்தமையும் கவனிக்க வேண்டியுள்ளது. இதற்கு உதாரணமாக 2019ஆம் ஆண்டு ஏககாலத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புச் சம்பவங்களை குறிப்பிட முடியும்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு அனர்த்தங்கள் குறித்து இலங்கை புலனாய்வுத்துறைக்கு இந்தியா முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால், இலங்கை புலனாய்வுத்துறை இதுகுறித்து எதனையும் தகுந்த வகையில் கவனத்தில் கொள்ளவில்லை. இதன்பின்னர் உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு , நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஏககாலத்தில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று சிறுவர்கள், பெண்கள் உட்பட மொத்தம் முன்னூறு பேர் வரை கொல்லப்பட்டமையை அடுத்தே இந்திய புலனாய்வுத்துறையினர் முன்கூட்டியே வழங்கிய தகவல்கள் எவ்வளவு தூரம் கச்சிதமானவை என்பதை இலங்கை புலனாய்வுத்துறையினர் அறிந்து கொண்டனர்.

இந்திய புலனாய்வுத்துறையினர் வழங்கியுள்ள தகவல்கள் குறித்து தி இந்து பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் இலங்கையில் தாக்குதல் நடத்துவது பற்றிய திட்டங்களை வடிவமைக்க இந்தியாவுக்குள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாடொன்றிலிருந்து வந்துள்ளாரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்தியாவின் தமிழக மாநிலத்தின் நீண்ட கரையோர பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய கரையோர பாதுகாப்பு படை மற்றும் அதன் விமான கண்காணிப்பு பிரிவு ஆகியனவும் தற்போது 24 மணிநேரமும் பாக்கு நீரிணைப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக தமிழ்நாட்டில் சிலர் கைது செய்யப்பட்டுமிருந்தனர். இவர்களில் ஒருவர் பெண்ணாவார். அவரிடமிருந்து நிறைய பணம் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையிலேயே இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளையும் சாதகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு வருவதாக இந்திய புலனாய்வுத்துறை இலங்கை பாதுகாப்புத்துறையை எச்சரித்துள்ளது.


இதேவேளை, இலங்கையைப் பொறுத்தவரை கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டம், கடந்த வாரம் பெரும் வன்முறையாகவும் வெடித்ததோடு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஒன்பது பேரை அந்த வன்முறை பலியெடுத்திருந்தது. அத்துடன், சொத்துக்கள், உடைமைகளுக்கு பலத்த சேதங்களையும் அந்த வன்முறை ஏற்படுத்திவிட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில் தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் தாக்குதல்களுக்கு தயாராகின்றனர் என்று இந்திய புலனாய்வுத் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள தகவலை எவ்விதத்திலும் அசட்டை செய்வது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்க முடியாது.

மறுபுறத்தே புலனாய்வுத்துறை என்பது உண்மைத்தன்மைகளை ஆராய்வது ஒருபுறமிருக்க, சில அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரம் சார்ந்த தேவைகளுக்காக திரைமறைவில் பல தகவல்களைக்கூட உருவாக்க முடியும். இதற்கென வெளிச்சக்திகளின் அனுசரணையைக்கூட புலனாய்வுத்துறையினால் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது கொழும்பின் மையப்பகுதியான காலிமுகத்திடலில் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அரசுக்கு எதிரான ஆரப்பாட்டத்தில் ஒரு மாதத்துக்கும் மேலாக ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு நாடளாவிய ரீதியிலும் ஆதரவு பெருகி வருகின்றது. எனவே, அவர்களின் கவனத்தை திசைதிருப்பும் விதத்தில்கூட தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த தகவலை புதிதாக உருவாக்கி அவர்களின் நடவடிக்கைகளை மழுங்கடித்து பின்வாங்க வைக்கும் ஒரு செயல்பாடாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த தகவல் புலனாய்வுத்துறையினரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

விரும்பிய பொருட்களை வாங்கி குடும்பத்தினரை மகிழ வைப்பீர்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். வீடு,மனை வாங்கும் முயற்சியில் நினைத்ததை செயல்படுத்துவீர்.

**இடபம்**

எதிரி தொல்லை விலகும். அக்கம் பக்கத்தினர் ஆதரவு உண்டாகும். எதிர்பார்த்த ஒருவர் இன்று உங்களை வந்து சந்திப்பார். இன்று குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.

**மிதுனம்**

பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சில செயல்களை மேற்கொள்வீர்கள். தொழிலை மாற்றுவது குறித்த சிந்தனை மேலோங்கும். பிறரின் உதவியால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்**

அலைச்சல் உண்டானாலும் அதனால் நல்ல ஆதாயம் ஏற்படும். விரும்பியவர்களை சந்திப்பதால் மகிழ்ச்சியில் மூழ்குவீர்கள். மறைமுக சதிகளை முறியடிப்பீர்கள். முயற்சி பலிதமாகும்.

**சிம்மம்**

நண்பரின் உண்மையான சுயரூபத்தை தெரிந்து கொள்வீர்கள். அதிரடியாக சில முயற்சி மேற்கொண்டு அதில் வெற்றி காண்பீர்கள். குடும்பத்திற்காக தைரியமான சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி**

தம்பதிக்கு இடையே இருந்த மனக்கசப்பு விலகும் நாள். உறவினர் ஒருவரால் ஆதாயம் ஏற்படும். மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. சுப நிகழ்ச்சி நடைபெற குடும்பத்துடன் கலந்து பேசுவீர்கள்

**துலாம்**

உங்கள் வேலைகளை போராடி முடிக்கும் நாள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். உறவினர் ஒருவரால் குடும்பத்தில் குழப்பம் உண்டாகும்.

**விருட்சிகம்**

பேச்சிலும், செயலிலும் நிதானமாக செயல்படவும். மறைமுகமாக பிரச்னை ஏற்படும். மன அழுத்தம் வேண்டாம். வேலைகளில் இழுபறி உண்டாவதுடன் அதன்வழியே செலவுகள் ஏற்படும்.

**தனுசு**

பிரபலங்களுடன் சந்திப்பு நிகழும் அவர்களால் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**மகரம்**

மற்றவர்களுக்காக சில செயல்களில் தீவிரமாக ஈடுபடுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். நிதி நிலை சீராகும். குடும்பத்தின் மீது அக்கறை செலுத்துவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**

அலைச்சல், மனஅழுத்தம் குறைந்து நிம்மதி காண்பீர்கள். குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். மகிழ்ச்சியான நாள். தள்ளிப்போன செயல் ஒன்று நடைபெறுவதால் மகிழ்ச்சி கூடும்.

**மீனம்**

எதிர்பாராத பயணம் திருப்தி தராது. நெருக்கடியான நாள். உங்களால் குடும்பத்தில் வீண் பிரச்னை தோன்றி மறையும். பிறர் செயலில் தலையீடு செய்வதை தவிர்க்கவும்.

# தொடரும் உண்ணாவிரதம்; முருகன் உயிருக்கு ஆபத்து!

## காப்பாற்றுமாறு அவசர மனு

சென்னை, மே 16

சிறை விடுப்பு (பரோல்) கோரி வேலூர் மத்திய சிறையில் நேற்று 15 ஆவது நாளாகவும் உண்ணாவிரதம் இருக்கும் ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புபட்ட முருகனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள அவரை காப்பாற்ற வேண்டும் என்று தமிழக முதல்வருக்கு சிறைக் கைதிகள் உரிமை மையம் அவசர மனு அனுப்பியுள்ளது.

வேலூர் மத்திய சிறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் முருகன், தன்னை சிறை விடுப்பில் விடக்கோரி கடந்த மே-01முதல் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

தண்ணீர் கூட அருந்தால் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் அவர், குறைபட்சம் 6 நாள்களாவது சிறைவிடுப்பு வழங்காவிடில் தான் உண்ணாவிரதம் இருந்தே உயிர் துறக்கப் போகிறார் என்றும் தெரிவித்திருந்தார்.

முருகனின் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 15 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. இந்த நிலையில், தொடர்ந்து



தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் முருகனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது எனவும், உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள அவரைக் காப்பாற்ற வேண்டும் என்றும் சிறைக் கைதிகள் உரிமை மையம் சார்பில், அதன் இயக்குநரும், முருகனின் வழக்குரைஞருமான பி. புகழேந்தி தமிழக முதல்வர், உள்துறைச் செயலர், சிறைத் துறை தலைவர் ஆகியோருக்கு அவசர மனு அனுப்பியுள்ளார்.

சிறை விடுப்பு கோரி தண்ணீர் கூட அருந்தாமல் 15ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வரும் முருகனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகவும், அவரது நாவு வடு ஒட்டிய நிலையில் பேச முடியாமல் தொடர்ந்து மயக்க நிலையில் இருப்பதாகவும் சிறைக் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது என புகழேந்தி கூறியுள்ளார்.

ஆனால், சிறை அதிகாரிகளிடம் கேட்டபோது, முருகனின் நிலையை முழுமையாக தெரிவிக்காமல் சோர்வாக இருப்பதால், அவருக்கு வெள்ளிக்கிழமை மாலை முதல் குளுக்கோஸ் ஏற்றப்படுவதாக மட்டுமே கூறுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறை அதிகாரிகள் முருகனின் உடல் நிலையை கண்டு கொள்ளாமல் உள்ளனர். தமிழக முதல்வர் உடனடியாக இந்தப் பிரச்னையில் தலையிட்டு, முருகனின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று அவருக்கு மனு அனுப்பியுள்ளோம். முதல்வரிடம் இது குறித்து வலியுறுத்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம் எனவும் வழங்கறிஞர் புகழேந்தி தெரிவித்தார். (ஐ)

# தனுஷ்கோடியில் கலங்கரை விளக்கு; தலைமன்னாரும் கண்காணிப்பில்!

இராமேஸ்வரம், மே 16

இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடியில் புதியதாக கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள நவீன ராடர் கருவிகள் மின் விளக்கு ஒளி மூலம், 30 கி.மீ தூரத்திலிருந்து, அதாவது இலங்கையின் தலைமன்னாரையும் பார்க்க முடியும்.

புதியதாக கட்டப்பட்டுள்ள இந்த கலங்கரை விளக்கத்தை நேற்றுமுன்தினம் மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோ காணொலி மூலம் திறந்து வைத்தார். (ஐ)



# பேரறிவாளன் விடுதலை; ஜனாதிபதியிடமே முடிவு!



## இந்திய மத்திய அரசு வாதம்

புதுடில்லி, மே 16

பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் குடியரசுத் தலைவர்தான் முடிவெடுக்க முடியும் என்று உச்ச நீதிமன்றில் எழுத்து பூர்வமாக தாக்கல் செய்துள்ள வாதத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனை விடுதலை செய்வது தொடர்பான வழக்கு நடக்கிறது. இந்த வழக்கு திகதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய மத் திய அரசு வழங்கியுள்ள எழுத்து மூல வாதத்தில், ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப் பட்ட பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றத்தால் ஆயுளாக தண் டனை குறைப்பு செய்யப்பட் டது. மனுதாரரை முன்கூட் டியே விடுதலை செய்வது தொடர்பான மனு குடியரசுத் தலைவர் முன்பாக பரிசீல னையில் உள்ளது.

கடந்த மார்ச் மாதம் உச்ச நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியுள்ளது. இதைத்தவிர வேறு எந்த நிவாரணமும் வழங்கக்கூடாது. பேரறிவாளன் விவகாரத்தில் குற்றத்தின் தீவிர தன்மை, ஆதாரங்கள் உள்ளிட்ட எதையுமே கருத்தில் கொள்ளாமல் தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது.

எனவேதான், ஆளுநர் இந்த விவகாரம் தொடர்பாக முடிவெடுக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்துள்ளார். இந்த விடயத்தில் தற்போது குடியரசுத் தலைவர் மட்டுமே முடிவு எடுக்க முடியும். எனவே, பேரறிவாளன் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)





# மதத் தலைவர்களின் தலைமைத்துவத்தில் வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம்!

## புலம்பெயர் அமைப்புக்கள் முயற்சி

யாழ்ப்பாணம், மே 16

**இலங்கையின் ஏனைய பாகங்களில் காணப்படும் மனித மற்றும் அபிவிருத்தி மட்டங்களுக்கு சமமாக வடக்கு, கிழக்கை மேம்படுத்தும் முகமாக புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடைக் கால நிர்வாகத்தை நிறுவுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.**

இந்தச் செயல்பாட்டில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், துறைசார் நிபுணர்களையும், புலம்பெயர் அமைப்புக்களையும் உள்ளீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பு பணிகளை வட, கிழக்கைச் சார்ந்த மதத்தலைவர்களிடத்தில் ஒப்படைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், குறித்த இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஓர் உச்சசபையை நிறுவுவதற்கு முனைப்புக் காட்டப்படுகின்றது. அந்த சபையானது, சிறப்பு சட்டவாக்கல், நிறைவேற்றதிகார, அரசியல்ரீதியான, பொருளாதார ரீதியான நிதிசார்பான, 3 அல்லது அதற்கும் மேற்பட்ட வருட காலத்திற்குமான இடைக்கால நடவடிக்கை ஒன்றாக சர்வதேச நிதியுதவியைப் பெறுவதற்கான அதிகாரங்கள் உட்பட்ட ஏனைய தொடர்புபட்ட, அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், உள்நாட்டுப் பிரச்னை, தொடர் வன்முறைச் சம்பவங்களும் மீளவும் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தவும் சமமானதும் நிலைபேறானதுமான சமாதானத்தை அடையவும் இந்தப் பிராந்தியத்தின் பூகோள-அரசியல் திடத்தன்மையினை நிறுவுவதற்கும் அதனைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்குமாக, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் நாடுகளின் கோப் குழுக்களைச் சேர்ந்த சர்வதேச சமூகத்தை எந்தவொரு பேச்சுக்களிலும் நடுவர்களாகவும் அதன் பின்னால் இடம்பெறும் ஒப்பந்தங்களின் நடைமுறைப்படுத்தல்களுக்கு உத்தரவாதமளிப்பவர்களாகக் கொண்டு அவர்களின் அனுசரணையின்கீழ் சுயநிர்ணய உரிமை மற்றும் இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் தமிழ்த் தேசியக் கேள்விக்கு சமஷ்டி கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ரீதியான தீர்வைப் பெறுவதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக யு.எஸ்.ரோல்க், பிரித்தானிய தமிழர் பேரவை, கனடிய தேசிய மக்களவை ஆகிய புலம்பெயர் அமைப்புக்கள் கரிசனை கொண் டுள்ளன. அத்துடன், இந்த விடயம் சம்பந்தமாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினான சிவ ஞானம் சிறிதரனால் முன்மொழி வொன்று செய்யப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (ஐ)

# குமுதினி படகு படுகொலை; நெடுந்தீவில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 16

குமுதினி படகுப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று நெடுந்தீவில் நினைவேந்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகை கடற்படை வழிமறித்தது. படகில் ஏறியவர்கள் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என 36 பேரை வெட்டிக் கொலை செய்தது.

இந்தப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றாகும். இதையொட்டி, காலை 7.45 மணிக்கு நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நெடுந்தீவு இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள குமுதினி படகு படுகொலை நினைவாலயத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

முற்பகல் 11 மணியளவில் கொல்லப்பட்டோருக்காக தீபம் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து படுகொலையானவர்கள் நினைவாக சூழகம் அமைப்பினால் வழங்கப்பட்ட மரங்கள் நாட்டப்பட்டன. அத்துடன், மக்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது மக்கள், அரசியல் பிரமுகர்களும் சமூக ஆர்வலர்களும் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-3)

# கத்திமுனையில் இளைஞரிடம் 15,000 ரூபாய், கைபேசி வழிப்பறி!

யாழ்ப்பாணம், மே 16

புன்னாலைக்கட்டுவன் - அச்சுவேலி வீதி ஊடாக பயணித்த இளைஞரை கத்தி முனையில் அச்சுறுத்திய குழு ஒன்று பெறுமதியான கைபேசி, 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை பறித்து சென்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் புன்னாலைக்கட்டுவனில் இருந்து அச்சுவேலி செல்லும் வீதி ஊடாக இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

அவரை, மூவர் கொண்ட குழு வழிமறித்துள்ளது. இளைஞர் மோட்டார் சைக்கிளை நிறுத்தியதை தொடர்ந்து அவரை கத்தி முனையில் அச்சுறுத்தியவர்கள் பெறுமதியான கைபேசி மற்றும் பாண் விற்பனை செய்த 15 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை பறித்து சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வீதியில் நின்ற இளைஞரிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு!

வடமராட்சி, மே 16

வீதியில் நின்ற இளைஞனின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுணாவில் பெருக்கம் குளப் பிள்ளையார் ஆலயம் அருகே நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. அருகிலிருந்த சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை சான்றாதார மாகக் கொண்டு சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)



# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!

யாழ்ப்பாணம், மே 16

இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்படும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்றைய தினம் நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் ஞாயிறு பூசையைத் தொடர்ந்து

முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

நவாலி புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆடி 9ஆம் திகதி அரச விமான தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ-3)

## நாளை மறுதினம் நினைவேந்தல்:

# முள்ளிவாய்க்காலில் படைகள் குவிப்பு கெடுபிடி நடவடிக்கைகளும் ஆரம்பம்!

முல்லைத்தீவு, மே 16

தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை இடம் பெறவுள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் நிலைமைகள் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளனர்.

இதனிடையே, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகம் அருகே இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்கு அருகில் பொலிஸாரும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், முள்ளிவாய்க்கால் முற்றத்துக்கு செல்லும் வழியிலும் சந்தியிலும் பெருமளவு இராணுவமும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு, சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே, நினைவுமுற்ற நிலவரம் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் நேற்று அச்சுறுத்தப்பட்டனர் என்றும் அறிய வருகின்றது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்க வேண்டாம் என்று கூறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போராட்டக்காரர் ஒருவரின் வீட்டின்மீது துப்பாக்கி சூடு!

கொழும்பு, மே 16

மொனராகலை நிக்கவரெட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

அந்தப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக கட்சிசார் பின்றி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இளைஞரொருவரின் வீட்டின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் எப்பட்டுள்ளது.

குறித்த இளைஞரின் சகோதரர் இம்முறை க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ளார் என்றும் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கே)

# அலரி மாளிகை முன்பு வன்முறை; தாக்குதல் நடத்திய ஒருவர் கைது!

கொழும்பு, மே 16

அலரி மாளிகைக்கு முன்பாக வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபரொருவரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நேற்று கைதுசெய்துள்ளனர்.

கொழும்பு மொரட்டுமுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்தே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது, கடந்த 9ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது.

அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்றத் தரப்பினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# வவுனியா சிறையிலிருந்து கைதிகள் மூவர் விடுதலை!

வவுனியா, மே 16

வவுனியா சிறையிலிருந்து 3 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த 35, 45 மற்றும் 63 ஆகிய வயதுகளையுடைய 3 கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் ந. பிரபாகரன் தலைமையில் இந்த கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் 244 கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# 20ஐ ஆதரித்த முஸ்லிம் எம்.பிக்களை சந்தித்தார் எதிர்க்கட்சி தலைவர் சஜித்!

கொழும்பு, மே 16

**சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான திகாமடுல்லை (அம்பாறை) மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசிம் திருமலையை சேர்ந்த எம்.எஸ்.தௌபீக் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனுராதபுர மாவட்ட இஷாக் ருஹமான் ஆகியோர் நேற்றுமுன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது அலுவலகத்தில் சந்தித்தார்.**

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் முகமாக ஐக்கிய மக்கள் சக்திக்கு தங்கள் ஆதரவை வழங்குவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்கால அரசியல் செயல்பாடுகள் அனைத்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து முன்னெடுப்பதாகவும் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்போது அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டு பின்னர் தமது ஆதரவை விலக்கிக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# நிதி அமைச்சு பிரதமர் வசம்!

கொழும்பு, மே 16

நிதி அமைச்சும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமே ஒப்படைக்கப்படவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் அமைச்சுகளுக்கு மேலதிகமாக, நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் அவர் செயல்படுவார் என்று தெரியவந்துள்ளது.

முன்னதாக, பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். அவரிடமிருந்த நிதியமைச்சு பின்னர் பஸில் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் அலி சப்ரியிடம் நிதியமைச்சு கையளிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ஐ)

# அமரகீர்த்தி எம். பி. கொலை; நால்வர் சந்தேகத்தில் கைது!

கொழும்பு, மே 16

அமரகீர்த்தி அத்துக்கோரள கொலையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடலில் ஏற்பட்ட வன்முறைகளின் தொடர்ச்சியாக நிட்டம்புவையில் வெடித்த கலவரத்தில் அமரகீர்த்தி அத்துக்கோரள எம். பியும் அவரின் மெய்ப்பாதுகாவலரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

இவர்கள் மறைந்திருந்த இடம் கலவரக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டதையடுத்து அத்துக்கோரள எம். பி. தற்கொலை செய்துகொண்டார் என்றுகூறப்பட்டது. ஆனால், பிரேத பரிசோதனையில் அவர் அடித்தே கொல்லப்பட்டார் என்று அறிய வந்தது.

இந்நிலையில், இந்த மரணம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நால்வரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர். (ஐ)

# சுசில், அநுர எம்.பிக்கள் பிரதமருக்கு ஆதரவாம்!

கொழும்பு, மே 16

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படப் போவதாக அறிவித்தவர்களில் இருவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர். அவர்களுக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளன என்று அறிய வருகின்றது.

இதற்கமைய சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராகவும், அநுர பிரியதர்ஷன யாப்பா விவசாய அமைச்சராகவும் பதவியேற்கவுள்ளனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# “ஒத்துழைப்பு வழங்கி செயல்பட அனைவரும் முன்வர வேண்டும்”

கொழும்பு, மே 16

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கி செயல்படுவதற்கு இலங்கையர்கள் முன்வர வேண்டும் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள காணொலியில்,

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் வெசாக் தினத்தில் முக்கியமான விடயமொன்றை கூற வேண்டும். கொரோனா பெருந்தொற்றுடன் கடந்த இரண்டு வருடங்களாக வெசாக் பௌர்ணமி தினத்தை எம்மால் சிறந்த முறையில் கொண்டாட முடியாத நிலைமை ஏற்பட்டது.

இவ்வருடம் வெசாக் தினத்தை கொண்டாடக்கூடிய சூழல் இருந்தாலும் அதனை மகிழ்ச்சியுடன் கொண்டாடக் கூடிய மனநிலையில் ஒருவரும் இல்லை. ஒருபுறத்தில் வீட்டுப் பிரச்சினைகள், மறுபுறத்தில் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வன்முறை.

நாம் அனைவரும் மிகவும் பொறுமையுடன் நடந்துக் கொள்ள வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. ஆவேசப்பட்டு மக்களின் வீடுகளை, வாகனங்களை சேதப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இதேபோன்று கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையர்கள் என்பவர்கள் இவ்வாறான வன்முறைகளில் ஈடுபவர்கள் அல்லர். எனினும் இன்று நாம் அந்த நிலைமைக்கு சென்றுள்ளோம். இது உண்மையில் மன வருத்தத்துக்குறிய விடயமாகும்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்படுவோம் என்று வெசாக் தினத்திலாவது உறுதி பூண்டு செயற்பட இலங்கையர்களாகிய நாம் முன்வர வேண்டும். நாடு முன்னோக்கிப் பயணிப்பதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்வைத்து செயற்படவுள்ளது.

எனவே அதற்கு ஒத்துழைப்பு வழங்கி நாடு முன்னோக்கிப் பயணிப்பதற்கான இடம் வழங்கி செயல்பட வேண்டும் என்றே நான் சகலரிடமும் கோருகின்றேன் - என்றார். (கே)

# ‘உண்டியல்’ பணம் மாற்றம் இரு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 16

உண்டியல் முறையினூடாக அமெரிக்க டொலரை நாணய பரிமாற்றம் செய்வதற்கு முற்பட்ட இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரலஸ்கமுவை மற்றும் பில்லேவ பகுதிகளிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் 47 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் - இன்றைய மதிப்பில் சுமார் ஒரு கோடியே 71 இலட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் கிருலப்பனை சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

உண்டியல் முறையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாணய பரிமாற்றம் இடம்பெற்று வருவதாகவும் எதிர்காலத்தில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படும் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக பிரசன்ன!



கொழும்பு, மே 16

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவரை தொடர்ந்து, சபை முதல்வராக தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்போது ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகியமை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கான தெரிவு இடம்பெறவுள்ளது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தி குறித்த பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்னவின் பெயரை முன்வைக்கவுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தமது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பிரதி சபாநாயகர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்வைக்கவுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

# டீசல் தட்டுப்பாட்டின் எதிரொலி; பேருந்து சேவை முடங்கும் நிலை!

கொழும்பு, மே 16

**நாட்டில் டீசல் இன்மையால் நாடு முழுவதும் பேருந்து சேவைகளை 10 சதவீதமாக குறைக்க நேரிட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தொடர்ந்து டீசல் கிடைக்காவிடத்து இன்று முதல் தனியார் பேருந்துகள் சேவையில் இருந்து விலக நேரிடும் என அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

எனினும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியில் சகல பேருந்துகளும் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் சில நாட்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு மாத்திரமே டீசல் கையிருப்பில் உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எவரும் அரசுடன் சேரமாட்டார்கள்!

## கட்சியின் தலைவர் சஜித் நம்பிக்கை



கொழும்பு, மே 16

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரும் அரசுடன் இணைந்து கொள்ளமாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"சலுகைகளுக்காகவும், சிறப்புரிமைகளுக்காகவும் தமது கட்சியையோ அல்லது தமது சுயமரியாதையை காட்டிக்கொடுக்கும் உறுப்பினர்கள் யாரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. எவரும் அரசுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை.

சில ஊடகங்கள் பொய்யான வதந்திகளைப் பரப்பி, சர்வாதிகார அரசுக்கு ஒட்சிசனை வழங்க முயற்சிக்கின்றது. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து உறுப்பினர்களின் நோக்கமுமாகும்" - என்றார். (ஐ)

# பொலிஸ் மா அதிபர் பதவி விலகவேண்டும்!

## ஆளும் கட்சியினர் வலியுறுத்து

கொழும்பு, மே 16

ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவை பதவி விலகுமாறு அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதியால் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று அலரிமாளிகைக்குள் பிரவேசித்த போதும் நடவடிக்கை எடுக்கப்படாததே பொலிஸ் மா அதிபரை பதவி விலகச் செய்யுமாறு தெரிவித்தமைக்கு முக்கிய காரணமாகும்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அலரிமாளிகைக்குள் பிரவேசிப்பதைத் தடுக்குமாறு மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்த போது, அவர்களைக் கலைக்க உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மூத்த பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அவர் தான் நாட்டின் ஜனாதிபதி எனவும், போராட்டக்காரர்களை அலரிமாளிகைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது எனவும் கடுமையாக அறிவுறுத்தியுள்ளார். இதையடுத்து போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தின் மூத்த அதிகாரிகள் 30இற்கும் மேற்பட்ட தடவைகள் மூத்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளனர். எனினும் அதிகாரிகள் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்த ஆளும் கட்சிக் குழு கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண பொலிஸ் மா அதிபரை கடுமையாக விமர்சித்துள்ளார். இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபரே முதன்மை பிரதிவாதி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதட்டி, திட்டி, பல்வேறு இழிவான கருத்துகளை கூறி பொலிஸ் மா அதிபரை கடுமையாக விமர்சித்தனர் என்று கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், இவ்வாறானதொரு சம்பவம் தொடர்பில் தாம் மூன்று மாதங்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தாரெனப் பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, அண்மைய சம்பவங்கள் காரணமாக முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, அவரது மனைவி மற்றும் குழந்தை மூன்று இடங்களில் தங்கியுள்ளனர். முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

தொழில் புரிபவர் என்ற வகையில் வருமான வரியை முறையாக செலுத்துவதாகவும், யாருக்கும் எந்த இடையூறும் ஏற்படுத்துவதில்லை எனவும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அரசியலில் இருந்து பணம் திரட்டுவதற்காக அல்ல, நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே தான் அரசியலுக்கு வந்தாரெனவும் முன்னாள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தனக்கு தெரிந்த வரையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர மற்ற அனைவரும் அரசியலில் சம்பாதித்த பணத்தில் அல்ல, வங்கிக் கடனில் வீடுகளை கட்டியுள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார். (ஐ)

# நோ பயர் ஸோன் ஆவணப்படத்தை சிங்கள மக்கள் பார்க்க வேண்டும்!

## கெலும் மக்ரே கோரிக்கை



லண்டன், மே 16

பல்லின மக்களும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் அடங்கிய "நோ பயர் ஸோன்" என்ற ஆவணப்படத்தின் சிங்கள மொழி பெயர்ப்பை அனைவரையும் பார்க்கச்செய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் அந்தப் படத்தின் இயக்குநர் கெலம் மக்ரே, உண்மையே நீதிக்கான முதற்படி என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றக் காணொலிகளுடன் கூடியதாக கெலம் மக்ரேவினால் தயாரிக்கப்பட்ட "நோ பயர் ஸோன்" என்ற ஆவணப்படம் 9 வருடங்களுக்கு முன்னர் "சனல் 4" என்ற தொலைக்காட்சி சேவையில் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தற்போது அந்த ஆவணப் படத்தை சிங்கள மக்களும் பார்வையிடவேண்டும் என்பதை வலியுறுத்தி அவர் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"இலங்கையில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக அனைத்துச் சமூகங்களும் கிளர்ந்தெழுந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், "நோ பயர் ஸோன்" (யுத்த சூனியவலயம்) என்ற ஆவணப்படத்தின் சிங்கள மொழி பெயர்ப்பை அனைத்து மக்களையும் பார்க்கச்செய்வதற்கு ஊக்குவிப்பது வரவேற்கத்தக்கதாகும். அதனை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும். உண்மை எதிர்காலத்திற்கு உதவும்" என்று கெலும் மக்ரே அப்பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத்தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் மற்றுமொரு பதிவைச் செய்திருக்கின்றார். "நோ பயர் ஸோன்" ஆவணப் படத்தின் சிங்கள மொழி பெயர்ப்பை முதன்முதலாகப் பார்வையிடுகின்ற பலர் ருவிட்டர் பதிவுகளை வெளியிட்டு வருகின்றனர் என்று அப்பதிவில் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், "உண்மையே நீதிக்கான முதற்படி" என்ற வசனத்துடன் அந்த ஆவணப்படத்தில் லிங்கைப் பதிவேற்றம் செய்திருக்கின்றார். அதனை அனைவருக்கும் பகிருமாறும் கேட்டுக்கொண்டிருக்கின்றார். (ஐ)

# புலிகள் மீண்டும் ஒன்றிணைவா? மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு!

கொழும்பு, மே 16

இலங்கையில் முன்னாள் புலி உறுப்பினர்கள் தாக்குதல் நடத்த "மீண்டும் ஒன்றிணைகிறார்கள்" என்று இந்தியாவின் தி இந்து நாளிதழ் வெளியிட்ட செய்தியை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இந்திய உளவுத்துறை ஆதாரங்களை மேற்கோள்காட்டியே, தி இந்து இந்த செய்தியை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செய்தி தொடர்பாளர் கருத்து வெளியிடுகையில்,

"கட்டுரை முற்றிலும் ஆதாரமற்றது. அத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து எங்களுக்கு உளவுத்துறை எச்சரிக்கை எதுவும் வரவில்லை" - என்றார்.

இதேசமயம், இலங்கை அரசியல் தலைவர்களும் இந்திய பாதுகாப்பு ஸ்தாபனத்தின் கூற்றுகளுக்கு கடுமையாக பதிலளித்தனர். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "புலிகளின் மீள் உருவாக்கம் பற்றிய செய்தி இன உறவுகள் மேம்பட்டு வரும் இலங்கையின் இன்றைய சமூகச் சூழலில் மிகவும் கவலையளிக்கிறது" என்றார். (ஐ)



# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, புதிய பொதுத்தேர்தல் தொடர்பில் குறுகியகால அட்டவணையை

## ஜனாதிபதியும் பிரதமரும் அறிவிக்கவேண்டும்!

### தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தல்

இலங்கைக்கு புதிய ஒரு பிரதமர் கிடைத்திருக்கிறார். ஆனால், அவரது நியமனம் குறித்து சர்ச்சைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. தற்போதைய நெருக்கடிக்கு வழிவகுத்த நடைமுறைகளை தொடருகின்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அதிகாரங்களை அடாத்தான முறையில் பயன்படுத்துகின்றார் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.இலங்கை முன்னென்றும் கண்டிராத வகையிலான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள், பரந்தளவிலான மக்கள் போராட்டங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையில்,பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை கலந்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார். ஆனால்,அவர் அவ்வாறு செய்யவில்லை. பதிலாக சகல எதிரணி கட்சிகளின் அதிருப்திக்கு மத்தியில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். அதன் மூலமாக தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டுவந்து முயற்சிகளுக்கு அவர் முடிவைக் கட்டினார்.

புதிய பிரதமருக்கு பல வருட கால அனுபவம் இருக்கிறது.நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக அங்கம் வகித்துவரும் விக்கிரமசிங்க ஏற்கனவே ஐந்து தடவைகள் நாட்டின் பிரதமராக பதவிவகித்திருக்கிறார்.ஆனால் அவருக்கு முன்னால் பாரிய சவால்மிக்க பணி காத்துக்கிடக்கிறது.பிரதமரின் கட்சிக்கு பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனமே இருக்கும் நிலையில், அவர் பாராளுமன்றத்தில் வேறுபட்ட சிந்தனை களையும் அரசியல் நலன்களையும் நிபுணத்துவங்களையும் கொண்ட ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் பணியாற்றவேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் நாட்ட நலன்களை மனதில் கொண்டவர்களாகவும் இருக்கி றார்கள். இது ஒரு வழமையான அரசாங் கம் அல்ல, தார்மீக மற்றும் பொருளா தார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக நிறுவப்பட்ட ஒன்றாகும்.அதனால், இந்த அரசாங்கம் பதவிகளுக்கு ஆட்களை - பாராளுமன்றத்துக்குள்ளிருந்தோ அல்லது வெளியில் இருந்தோ - தெரிவுசெய்யும் போது மிகவும் வேறபட்டமுறையில் செயற்படவேண்டிய தேவை இருக்கிறது.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதிலும் அரசியல் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதிலும் பிரதமர் விக்கிரமசிங்க வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்துகின்ற அதேவேளை,அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் முறிந்துபோன நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவது அவரது முக்கியமான இலக்குகளில் ஒன்றாக இருக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது. புதிய பிரதமர் அடையக்கூடிய வெற்றி அல்லது தோல்வி இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்பதால் குறுகிய நோக்கங்களுடனான பழகிப்போன அரசியல் நடைமுறைகளுக்கு அப்பால் தன்னை அவர் நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தினால் எதிரணி கட்சிகள் உள்ளடங்கலாக பாராளுமன்றத்திற்குள் அவர் கருத்தொருமிப்பொன்றைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை இருக்கிறது.மீணடெழுவதற்கான இந்த பொதுவான பணியில் எகலரும் அவருக்கு ஆதரவை வழங்கவேண்டும்



எனாறு நாம் விரும்புகிறோம்.

ஒரு மாதகாலத்துக்கும் அதிகமான காலமாக கொழும்பு காலிமுகத்திடலிலும் நாட்டின் பல பாகங்களிலும் இடைவிடாமல் போராட்டங்களை நடத்துகின்ற சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் வெளிப்படுத்தி வரும் அர்ப்பணிப்பை தேசிய சமாதானப் பேரவை மிகவும் மெச்சுகிறது.அவர்களது தியாகங்களே அரசியல் மாற்றத்தைச் சாத்தியமாக்கியிருக்கிறது. அரசாங்க அனுசரணையுடனான குண்டர்களினாலும் அரசாங்க விரோத குழுக்கள் மற்றும் தனிநபர்களினாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை தேசிய சமாதானப்பேரவை கடுமையாக கண்டிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்கு சென்றிருக்கும் ஒரு நேரத்தில்,நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குகின்ற ஹோட்டல்கள் உட்பட தனியார் சொத்துக்களையும் பஸ்களையும் தீயிட்டுக் கொளுத்துவதும் ஆட்களை கொலைசெய்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல.அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளினால் தூண்டிவிடப்பட்ட வன்முறைகளே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவிவிலக நிர்ப்பந்தித் தன என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும்.வன்முறைகளுக்கு பொறுப் பானவர்கள் யார்யார் என்பதை கண்டறிந்து சட்டத்தின் முன்னால் அவர்களை பொறுப்புக்கூற வைக்கவேண்டியதும் முக்கியமானதாகும்.



ஊழலையும் வன்முறையையும் இன, மதவெறியையும் அனுமதிக்காத கட்டமைப்பு மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று நாம் அழைப்பு விடுக்கிறோம்.அண்மையில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாம் கோருகிறோம். அரசியலமைப்புக்கான 20வது திருத்தத்தை காலந்தாமதிக்காமல் ஒழித்துவிட்டு இருவார காலத்திற்குள் பாராளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரங்களை பாரப்படுத்தும் நடவடிக்கைகளே அவற்றில் முதன்மையானதாகும்.நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பது மற்றும் புதிய பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் குறுகிய கால அட்டவணையொன்றை அறிவிக்க வேண்டும் என்றும் தேசிய சமாதானப்பேரவை கோருகிறது.



# பாத்திரம் அறிந்து பிச்சையிடு!

அர்ஜுன் சம்பத்

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மட்டுமல்லாமல், அரசியல் குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அவசர நிலை அறிவிக்கப்பட்டு, அரசுக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிகளை அடக்க ராணுவம் பணிக்கப் பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து, புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமித்திருக்கிறார் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, உணவுப்பஞ்சம் ஆகியவற்றை தீர்த்து வைக்க, இந்திய அரசாங்கம் பெருமளவில் உதவி செய்து வருகிறது. அங்கு ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சம், பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து தமிழர்கள் பலரும் இந்தியாவிற்கு அகதிகளாக வரத் தொடங்கியுள்ளனர்.

இலங்கை அரசுக்கும், இலங்கை மக்களுக்கும் நாம் உதவுவது புதிதல்ல. வரலாற்றுக் காலம் தொட்டு இது நடைபெற்று வருகிறது. 750 ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர் பரராசசேகரன். அங்கு இருக்கின்ற மக்களுக்கு உதவும் வகையில் புகழேந்திப் புலவர் சடையப்ப வள்ளலிடம் பஞ்சம் குறித்த தகவல்களை தெரிவிக்கின்றார். சடையப்ப வள்ளல் தமிழகத்திலிருந்து ஈழத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி உதவுகின்றார்.

தேனார் தொடையார் பர ராச சிங்கப்பெரு மான்
செந்தமிழுக்கு காணார் நெல்லின் மலைகோடி
கண்டி நாடு கரைசேரக் கூனார் கப்பல்
ஆயிரத்தில் கொடு போய் அளித்த
கொடைத் தடக்கை மானா கரன் சங்கரன்
உடையான் வளம்சேர் சோழ மண்டலமே

என்கிற சோழ மண்டல சதகப் பாடல் மூலம் இதனை அறியலாம்.

இதே போல இலங்கையில் அனுராதபுர மன்னன் தேவநம்பியதீசன் கேட்ட அனைத்தையும் கொடுத்தார் இந்தியாவை ஆண்ட அசோக சக்கரவர்த்தி. அசோகர் இலங்கை மக்களுக்குத் தேவைப்படும் மருந்துகளையும் உணவுகளையும் இலங்கைக்கு அனுப்பி வைத்ததை தனது ஆட்சியின் 13ஆவது ஆண்டில் இரண்டாவது கல்வெட்டில் பதித்துள்ளார்.

இலங்கைக்கு பல்வேறு சமயங்களில் இந்திய அரசாங்கம் உதவி செய்து வந்துள்ளது. 1971 ஏப்ரலில் இலங்கையில் சிங்கள புரட்சிகர இளைஞர் அமைப்பு இலங்கை அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தது. அப்போதைய இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக, அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியிடம் உதவி கேட்டார். உடனே இந்தியப்படை அங்கே சென்று கிளர்ச்சியாளர்களை அடக்கி சிறிமாவோ அரசைக் காப்பாற்றியது.

2020 செப்டிரம்பரில் இலங்கைக்கு சொந்தமான எண்ணெய் கப்பல் ஒன்று கொழும்புக்கு அருகே தீப்பற்றி எரிந்தது. அப்போதும் இந்தியாவிடம் இலங்கை உதவி கோரியது. இந்திய கடலோர காவல்படை விரைந்து சென்று தீயை அணைத்து எண்ணெய் கப்பல் உடையாமல் காப்பாற்றி இலங்கையிடம் ஒப்படைத்தது.

1948 பெப்ரவரி 4 அன்று இலங்கை விடுதலை பெற்ற பிறகு இலங்கை அரசு கேட்டுக் கொண்டதால் இந்திய அரசாங்கம் செய்த உதவிகள் ஏராளம். ஆனால், இந்திய அரசாங்கமும், தமிழக மக்களும் செய்த உதவிகளுக்கு இந்தியாவிற்கோ தமிழக மக்களுக்கோ நன்றியுடைய அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டி ருக்கிறதா?



1971 டிசம்பரில் இந்தியா - பாகிஸ்தான் போர் நடைபெற்றபோது, பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்க விமானப் படைகளைப் பயன்படுத்துகிறது. அபோது இந்தியாவுக்கு உதவியாக இலங்கை தன் படையை அனுப்பவில்லை ஆதரவுக் குரல் கூட கொடுக்கவில்லை. மாறாக, பாகிஸ்தானுக்கு ஆதரவாக அந்நாட்டுப் படைகளுக்கு இலங்கை உதவியது. சிறிமாவோ அரசு, பாகிஸ்தான் விமானங்கள் எரிபொருள் நிரப்பிக் கொள்ள கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுமதி கொடுத்தது. அங்கிருந்து இந்தியாவைத் தாக்க பாகிஸ்தான் முற்பட்டது.

இதே போல இந்தியா - சீனா போரின் போதும் இலங்கை அரசாங்கம் சீனாவிற்குத்தான் ஆதரவாக நின்றது. சர்வதேச அரசியலிலும் இலங்கை அரசாங்கம் எப்பொழுதும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடுகளையே மேற்கொண்டு வருகிறது. ஆனால், இலங்கை தமிழ் மக்கள் எப்பொழுதும் இந்தியாவை ஆதரித்தே வந்துள்ளனர்.

2014 ஒக்ரோபரில் தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு கொழும்பு நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க ‘இந்திய மீனவர்களை சுட்டுக் கொல்வோம்’ என்று ஆவேசமாகப் பேசினார். சிங்கள கடற்படையின் அட்டூழியங்கள் இன்றும் தொடர்கிறது. இந்திய மீனவர்கள், அதாவது தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும் முடிவுக்கு வரவில்லை. இந்திய எல்லைக்குள் வந்து தீ வைப்பு உள்ளிட்ட காரியங்களில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டதும் வரலாறு.

1948 முதல் 1958 வரை பாக் நீரிணையிலும், மன்னார் வளைகுடாவிலும் காணப்பட்ட மீனவர்களின் படகு களை, தோணிகளைக் கைப்பற்றி அவற்றில் இருந்த மீன வர்களை ‘கள்ளத் தோணிகள்’ எனக்கூறி கைது செய்து கொழும்பில் சித்திரவதை முகாமில் வைத்து விசாரணை யின்றி கொடுமைப் படுத்தியது இலங்கை கடற்படை.

1960 முதல் 1970 வரை இலங்கையில் இந்திய மீனவர்களின் வள்ளங்களையும், தோணிகளையும் கடத்தல்காரர் கலங்கள் என கைப்பற்றியதோடு மீனவர்களை கொழும்பு சித்திரவதை முகாமில் அடைத்து வைத்தனர். 1970 முதல் 2009 வரையிலான 40 ஆண்டு காலத்தில் பாக் நீரிணையில் மன்னார் வளைகுடாவில் இரண்டா யிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் உயிரிழந் தார்கள். ராமேஸ்வரம் தீவில் நுழைந்த இலங்கை கடற்படை மீனவர் குடிசைகளை எரித்தது உச்சகட்ட துரோகமாகும்.

இந்தியாவுடன் இலங்கை செய்து கொண்ட உடன்பாடுகளை எப்போதும் தனக்கு சாதகமாகவே இலங்கை பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்தியா, இலங்கையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களின்படி எப்பொழுதும் நடந்து கொள்ளும். ஆனால், இலங்கை, இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறித்தான் எப்போதும் செயல்பட்டிருக்கிறது.

1954 நேரு - கொத்தலாவலை ஒப்பந்தம், 1964 சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தம், 1974, 1976 கச்ச தீவுக்கான இந்திரா காந்தி - சிறிமாவோ ஒப்பந்தம், 1987 ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தம் இவை அனைத்தையுமே இந்தியத் தரப்பு நிறைவேற்றியது. இலங்கையோ அந்த ஒப்பந்தத்தில் உள்ள ஒரு ஷரத்தைக் கூட நிறைவேற்றவில்லை. ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதும், அதன் பிறகு ஒப்பந்தத்தை மீறுவதும் இலங்கை அரசாங்கத்திற்கு கைவந்த கலையாகும்.

1925 யாழ்ப்பாண மகேந்திரா ஒப்பந்தம், 1947 சோல்பரி ஒப்பந்தம், 1958 செல்வா ஒப்பந்தம், 1965 செல்வா - டட்லி ஒப்பந்தம் இவை அனைத்துமே இலங் கைத் தமிழர்களை இலங்கை அரசாங்கம் ஏமாற்றிய ஒப்பந்தங்கள். அந்த ஒப்பந்தங்களின் படி இலங்கை அரசு நடந்துகொள்ளவில்லை. இலங்கைத் தமிழர் தலைவர்கள் ஏமாந்தார்கள்.

இலங்கை 2015 அக்டோபரில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட தீர்மானத்தை 2020-இல் ஒப்புக் கொள்ள மறுத்தது. ஐ.நா. அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளிடம் கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

இந்தியா செய்த நன்மைகளை கருத்தில் கொள்ளாமல், இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் சீன தேசத்திற்கு ஆதரவாகவே இலங்கை நடந்து கொண்டு வருகிறது. இலங்கையில் சீனாவின் தளங்களை அமைத்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அது மட்டுமல்ல, இலங்கையில் இந்திய எதிர்ப்பு கொள்கைகளின் மூலமாகத்தான் சிங்கள அரசியல் கட்சிகள் வாக்காளர்களைக் கவர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு எதிராக, தமிழர்களுக்கு எதிராக முழங்கினால் மட்டுமே இலங்கையில் சிங்களர்களின் வாக்குகளைப் பெற முடியும் என இந்தியாவிடம் இலங்கை அரசியல்வாதிகள் கூறி வருகிறார்கள்.

இப்பொழுது இந்தியாவிடம் பஞ்சத்தைப் போக்க உணவு கேட்கிறார்கள் எரிபொருள் தட்டுப்பாட்டைப் போக்க உதவி கேட்கிறார்கள் கடன் சுமையில் இருந்து மீண்டு வர பண உதவி கேட்கிறார்கள்.

இந்த நிலையில் நாம் இலங்கைக்கு எந்த வகையில் உதவ வேண்டும் என்பதை சிந்தித்துதான் உதவி செய்ய வேண்டும். பாத்திரமறிந்துதான் பிச்சையிட வேண்டும்.

இலங்கைத் தமிழருக்கு அரசியல் உரிமைகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டும். இதற்கான ஷரத்து 1987 ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் உள்ளது. இந்த ஒப்பந்தத்தை இலங்கை நிறைவேற்ற இந்தியா வலியுறுத்த வேண்டும்.

ராஜீவ் காந்தி - ஜெயவர்தன ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு சாத்தியப்படும். தமிழர்களின் பகுதிகள் பாதுகாக்கப் படும். இந்தியாவில் மாநிலங்களுக்கு உள்ள உரிமைகள் போல தமிழர்களுக்கான மாநில உரிமை யும் கிடைத்து விடும். இலங்கையில் 13ஆவது அட்டவணை சீர்திருத்தம் ஏற்படும். இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஓரளவு சரியான தீர்வாக இது அமையும்.

அதே போல இந்திரா காந்தி - சிறிமாவோ செய்து கொண்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கச்சத்தீவில் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்த வேண்டும். இவற்றையெல்லாம் இந்திய பிரதமரும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரும் கருத்தில் கொண்டு செயல் பட வேண்டும். இந்த முறையும் நாம் ஏமாந்துவிடக் கூடாது!


(கட்டுரையாளர் : தலைவர், இந்து மக்கள் கட்சி)







# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?






1) 2) 3)

39. 3 * 4 ⌗ 3 = 15 இங்கு * ⌗ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..................

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..................

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..................

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..................

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) ✗ 2) ✓ 3) ✗ 4) ✗

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**16.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**16.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பொத்துவில் - முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரணி ஆரம்பம்!




பொத்துவில், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான நடைபவனி நேற்று ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்நிலையில், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று பொத்துவிலில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையில் பேரணி ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்தப் பேரணி வட, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட தலைவி திருமதி தம்பிராசா செல்வராணி தலைமையில் பொத்துவில் பிரதேச சபைக்கு முன்பாக நேற்று ஆரம்பமானது.



இதன்போது, முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்கள் நினைவாக ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலியுடன் பேரணி ஆரம்பமானது.

பேரணியில், தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைக்கு சர்வதேச சமூகம் நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த பேரணியில் வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள்,சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கிவருகின்றனர்.

நேற்று ஆரம்பமான இந்தப் பேரணி, திருக்கோவில், அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிகுடி ஊடாக கல்லடி பாலம் வழியாக மட்டக்களப்பை அடைந்து பின்னர் திருகோணமலையை அடைந்த, அங்கிருந்து நாளை செவ்வாய்க்கிழமை புறப்படடு நினைவேந்தல் தினமான 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலை சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# அனைத்து பிரச்னைகளும் ஒரே இரவில் தீர்ந்துவிடாது

## ஹசன் அலி சொல்கிறார்

மட்டக்களப்பு, மே 16

அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டுமென, ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செய லாளர் எம்.ரி. ஹசன் அலி தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

19ஆவது திருத்த சட்டம் இல்லாமல் செய்யப்பட்டு 20 ஆவது திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டதன் மூலம் ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம் மீண்டும் கிடைக்க பெற்றதே நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலைக்கு காரணம்.

சில தமிழ் அரசியல்வாதிகளும் 20ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். ஆனால், அவர்களை பிழை சொல்ல முடியாது. ஏனென்றால், அவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை முன்வைத்து மக்கள் ஆணையை பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள்.

20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை காற்றில் பறக்க விட்டிருகின்றார் கள்.

தமிழ், முஸ்லிம் மக்களை காலம் காலமாக எதிரிகளாகவே பார்த்து அரசியல் செய்து வரு கின்ற ராஜபக்ஷ அரசுக்கு ஆதர வாக முஸ்லிம் அரசியல்வாதி கள் கை உயர்த்தி முட்டு கொடுத்ததைதான் சகித்து கொள்ள முடியாது.

புதிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவை மக்களின் எதிர்பார்ப்புகள் மெல்ல மெல்லமாகவேனும் நிறைவேற வேண்டும். ஒரே இரவுக்குள் எல்லா பிரச்னைகளும் தீர்ந்து விட போவதில்லை - என்றுள்ளது. (ஐ)

# ரூ. 6 இலட்சம் பெறுமதியான மது வகைகள் கைப்பற்றல்!

மட்டக்களப்பு, மே 16

வெசாக் விடுமுறையைப் பயன்படுத்தி விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான மதுபான போத்தல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி - பெரிய கல்லாறு பகுதியிலேயே இந்த மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

750 கால் போத்தல்கள் மது பானம், 480 பியர் ரின்கள், 94 பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் சந்தை மதிப்பு 6 இலட்சம் ரூபாய் என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ரி. அபேயவிக்ரம தெரிவித்தார். (ஐ)

# மட்டு, திருமலையில் இரு சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, மே 16

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் ஆண்கள் இருவர் சடலங்கள் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு போரதீவுப் பற்று, நெல்லிக்காடு கிராமத்தில் விவசாயக் காணியில் இருந்து நான்கு பிள்ளைகளின் தந்தையான அழகிப்போடி தங்கராசா (வயது-65) என்பரின் சடலம் மீட்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை வீட்டிலிருந்து வெளியில் சென்றிருந்தார். இவரை காணாது உறவினர்கள் தேடிய நிலையில், அவரின் விவசாய காணியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இதேசமயம், திருகோணமலை - லிங்க நகர் கடற்பரப்பில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் கருணாகரன் (வயது-49) என்று அடையாளம் காணப்பட்டது.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் அந்தந்தப் பகுதிக்கு பொறுப்பான பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# கூட்டமைப்பு சூடுகண்ட பூனை; பிரதமர் விடயத்தில் நிதான முடிவு

## பங்காளிக் கட்சியான ரெலோ சொல்கிறது

மட்டக்களப்பு, மே 16

நல்லாட்சியில் ரணிலை தமிழ் தேசிய கூட்டமைப்பு பாதுகாத்தனர். சூடு கண்ட பூணை அடுப்பங்கரையை நாடாது அதுபோல் எமது தமிழ் தலைவர்கள் பல தடவைகள் சூடு கண்டும் மீண்டும் மீண்டும் அடுப்பங்கரைக்கு சென்றுள்ளனர். இருந்தபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்ப்பதற்கான தீர்வுத் திட்டங்கள் இல்லாத எந்தவோர் அமைச்சரவையிலும் தமிழ் தேசிய பரப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கக் கூடாது - பங்கேற்ற மாட்டார்கள் என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்துள்ளார்.



சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவும், தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும், ராஜபக்ஷ சகோதரர்களையும் காப்பாற்றக்கூடியவராக ரணிலை சிந்தித்து நியமித்திருக்கிறார். எதிர்க்கட்சியை உடைக்க எண்ணியிருக்கிறார். ஆனால், வருகின்ற பாராளுமன்ற அமர்வில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதமர் வேட்பாளர்கள் களமிறங்கவிருக்கும் நிலையில் தமிழ் பரப்பிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், நான் உட்பட மிகவும் நிதானமாகச் சிந்தித்து முடிவை எடுக்கவேண்டும்

எதிர்வரும் வாரத்தில் இந்த பிரதமர் தனக்குரிய பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி வரும். பாராளுமன்ற அமர்வு கூடுவதற்கு முன்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூடி தீர்க்கமான முடிவை எடுப் போம்.

இந்த ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி என்று கூறப்பட்ட 2015 இருந்து 2019 வரையன ஆட்சியில் பிரதமராக இருந்தார் 2018 ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூழ்ச்சியை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் சட்டத்தரணிகள் இதே ரணிலை பாதுகாத்தனர் எனவே இன்னும் அவ்வாறான நிலமைக்கு செல்வார்கள் என நினைக்கவில்லை.

சூடு கண்ட பூணை அடுப்பங்கரையை நாடாது அதுபோல் எமது தமிழ் தலைவர்கள் பல தடவைகள் சூடுகண்டும் மீண்டும் மீண்டும் அடுப்பங்கரைக்கு சென்றுள்ளனர். எனவே இனிமேலும் அவர்கள் செல்வார்கள் ஆனால் இன்று “கோட்டா கோ ஹோம்” என்று காலிமுகத்திடலில் இருக்கும் மக்கள் எமக்கு எதிராக கோ ஹோம் என்று கூச்சலிட நாங்கள் சந்தர்ப்பம் கொடுக்க கூடாது - என்றும் சொன்னார். (ஐ)

# ஏறாவூர் விபத்தில் குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு, மே 16

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மையிலம்பாவெளியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மையிலம்பாவெளி, காமாட்சியம்மன் ஆலய வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் தன்னாமுனையை சேர்ந்த முத்துலிங்கம் சிவாகரன் (வயது 40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கம்பிவேலியில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# உக்ரைன் - ரஷ்யா போரால் உணவுக்கு பெரும் நெருக்கடி!

## ஜி 7 நாடுகள் கூட்டாக எச்சரிக்கை

பெர்லின், மே 16

உக்ரைன்மீதான ரஷ்யாவின் போரால் சர்வதேச அளவில் பெரும் உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடி ஏற்படும் என 'ஜி 7' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.

அத்துடன், இந்தப் போரால் ஏழை நாடுகள் கடும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

'ஜி 7' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ஜேர்மனியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உக்ரைன்மீதான ரஷ்யாவின் போரால் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் சர்வதேச நெருக்கடியாக மாறியுள்ளது என இந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கிய ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டார்.

உக்ரைனியர்களிடம் உள்ள தானியங்களை சந்தைப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறியாவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சுமார் 5 கோடி மக்கள், குறிப்பாக ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்தவர்கள் பட்டினியை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார். இந்நிலையில் தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கான தடைகளை அகற்றுவதற்கு



ரஷ்யாவுக்கு கடுமையான முறையில் அழுத்தம் கொடுக்க வேண்டுமென சர்வதேச சமூகத்தை ஜி-7 நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

இதேவேளை, போரால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு மேலும் மனிதாபிமான உதவிகளை வழங்க ஜி-7 நாடுகள் உறுதியளித்துள்ளன.

ஜேர்மனியில் மூன்று நாட்கள் இடம்பெற்ற கூட்டத்தின் முடிவில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதனிடையே, உக்ரைன் தானியங்களைப் பெற்று தேவைப்படுவோருக்கு விநியோகிக்க கனடா தயாராக உள்ளதாக கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி கூறினார். பெரிய விவசாய உற்பத்தி, ஏற்றுமதியாளரான கனடா இதற்காக ஐரோப்பிய துறைமுகங்களுக்கு கப்பல்களை அனுப்ப தயாராக உள்ளது எனவும் அவர் கூறினார்.

உக்ரைனில் தேங்கியுள்ள தானியங்கள் உலகிற்கு அனுப்பப்படுவதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மெலனி ஜோலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இல்லையென்றால், பல இலட்சம் மக்கள் மக்கள் பஞ்சத்தை எதிர்கொள்வார்கள் எனவும் அவர் எச்சரித்தார்.

அத்துடன், சர்வதேச தடைகளை குறைமதிப்புக்கு உட்படுத்துவது அல்லது உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவது உட்பட ரஷ்யாவிற்கு எந்தவொரு வழிகளிலும் உதவ வேண்டாம் என்று ஜி-7 நாடுகள் சீனாவை கேட்டுக் கொண்டன. (ஐ)



## கார்கீவ் நகரத்தைவிட்டு பின்வாங்கியது ரஷ்யா!

கீவ், மே 16

உக்ரைனின் பதிலடியை சமாளிக்க முடியாமல் கார்கீவ் நகரிலிருந்து ரஷ்ய படைகள் பின்வாங்கின என்று கூறப்படுகின்றது.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவை போர் தொடங்கிய காலம்தொட்டு கைப்பற்றுவதற்கு ரஷ்யா முயன்று வருகின்றது. கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் போரில் ரஷ்யாவால் இந்த நகரத்தை கைப்பற்ற முடியவில்லை.

இந்த நகரத்தின் மீது ரஷ்யா அதியுச்ச பலத்தை பிரயோகித்த போதிலும் நகரத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை. இந்நிலையில், ரஷ்யா கார்கீவ் நகரத்தை விட்டு பின்வாங்கியுள்ளது.

இதையடுத்து அந்த நகரத்தின் மக்களும் மீளவும் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்பட்டது. இதனை அந்த நகரத்தின் மேயர் இஹோர் டெரகோவ் உறுதி செய்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு உக்ரைனைப் பொறுத்தமட்டில் டான்பாசில் ரஷ்யாவின் தாக்குதல் தொடர்கிறது.

உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, ஒரேநாளில் 6 நகரங்கள் மற்றும் கிராமங்களை ரஷ்ய படைகளிடமிருந்து உக்ரைன் படைகள் மீட்டெடுத்துள்ளன என தெரிவித்துள்ளார். (ஐ)




## 10 பேர் கொல்லப்படுவதை நேரலை செய்த கொலையாளி?

### அமெரிக்காவில் அதிர்ச்சி சம்பவம்

நியூயோர்க், மே 16

அமெரிக்காவில் ஆயுததாரி ஒருவர் வணிக வளாகம் ஒன்றுக்குள் புகுந்து நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய நபர் அதனை சமூக வலைத்தளத்தில் நேரலையாக ஒளிபரப்பியமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நியூயோர்க்கின் பபேலோ நகரில் உள்ள வணிக வாளகத்துக்குள் நேற்று நுழைந்த 18 வயதான இளைஞனே அங்கிருந்தவர்களை சரமாரியாகச் சுட்டார். இதையடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தி 10 பேரைக் கொன்ற கொலையாளியை பொலிஸார் சுற்றி வளைத்து பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

துப்பாக்கிச் சூடு நடத்த முன்னர் வணிக வளாகத்தின் முன்பாக காரில் வந்திறங்கும் இளைஞன் துப்பாக்கிச் சூடு நடத்தவுள்ளதாகவும் அதனை நேரலை செய்யப்போகிறார் என்றும் வெளியிட்ட காணொலி காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற பகுதி நியூயோர்க் நகரத்திற்கு வடக்கே சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இங்கு கறுப்பின மக்கள் அதிகம் வசித்து வருகின்றனர். இனவெறியே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச் சூடு நடத்தியபோது முன்னரே கூறியவாறு கொலையாளி அதனை சமூக வலைத்தளத்தில் நேரலையில் ஒளிபரப்பு செய்தாரா? என்பது தெரியவில்லை. இது குறித்து விசாரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஒரே தடவையில் 53 செய்மதிகளை விண்ணில் ஏவியது ஸ்பேஸ் எக்ஸ்!

நியூயோர்க், மே 16

அதிவேக இணைய சேவைக்காக 53 செயற்கைக்கோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணில் செலுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் அதிவேக இணை சேவையை வழங்குவதற்கு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஸ்ரார் லிங்க் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்துக்காக தலா 260 கிலோ எடையிலான செயற்கைக் கோள்களை தொடர்ச்சியாக விண்ணுக்கு அனுப்பி வருகிறது.

இதுவரை பல்வேறு கட்டங்களாக 2 ஆயிரத்துக்கும் அதிகமான செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பி வெற்றிகரமாக புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் நேற்று முன்தினம் மேலும் 53 செயற்கைக்கோள்களை பால்கன்-9 ஏவூர்தி மூலம் ஏவியுள்ளது. (ஐ)






## வடகொரியாவில் கொரோனாவுக்கு 820,620 பேர் பாதிப்பு; 42 பேர் மரணம்!

பியோங்யாங், மே 16

வடகொரியாவில் 3 நாட்களில் 8 இலட்சத்து 20 ஆயிரத்து 620 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில், 42 பேர் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் கடந்த 2 ஆண்டுகளாக கொரோன தொற்று அச்சுறுத்தியபோதும், வடகொரியாவில் எந்தப் பாதிப்புக்களும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், மக்களில் யாருக்கும் தடுப்பூசியும் போடப்படவில்லை.

இந்நிலையில், கடந்த 12ஆம் திகதி முதல் தொற்று பரவுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று வரை அந்த நாட்டில் 42 பேர் தொற்றால் உயிரிழந்தனர். எனினும், அரசாங்கம் ஒருவரின் இறப்பை மட்டுமே உறுதி செய்துள்ளது. தவிர கடந்த 3 நாட்களிலும் 8 இலட்சத்து 20 ஆயிரத்து 620 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

3 இலட்சத்து 24 ஆயிரத்து 550 பேர் தனிமைப்படுத்தப்பட்டு, மருத்துவ சிகிச்சையில் உள்ளனர் என வடகொரியாவில் இருந்து வெளிவரும் அரசு ஊடக செய்தியான கே.சி.என்.ஏ. தெரிவிக்கின்றது.

இதேவேளை, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த சீனா அந்த நாட்டுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. (ஐ)

# அண்ட்ரூ சைமன்ஸ் கார் விபத்தில் மரணம்!

சிட்னி, மே 16

அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் அண்ட்ரூ சைமன்ஸ் கார் விபத்தில் மரணமடைந்தார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்ண் சில மாதங்கள் முன்பு மாரடைப்பால் உயிரிழந்தார். இப்போது கிரிக்கெட் ரசிகர்களுக்கு மேலும் அதிர்ச்சியாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் மற்றொரு ஜாம்பவான் வீரர் அண்ட்ரூ சைமன்ஸ் கார் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

சைமன்ஸ் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் ஒரு கார் விபத்தில் சிக்கினார் என்று அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பொலிஸார் உறுதிப்படுத்தினார்.

அவர் மட்டும் தனியாக காரில் சென்றுள்ளார். கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து உருண்டு விழுந்ததாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில், சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார். 46 வயதான சைமன்ஸ் அவுஸ்திரேலிய அணிக்காக 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடினார். 1999 - 2007ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஒருநாள் கிரிக்கெட் உலகை அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தியபோது அந்த அணியின் முக்கிய தூணாக சிறந்த சகலதுறை வீரராக வலம்வந்தார் அவர். தனது வித்தியாசமான தலை அலங்காரம் மூலம் கவனம் ஈர்க்கப்பட்ட அவர், ஓய்வுக்கு பின் பொக்ஸ் கிரிக்கெட்டின் வர்ணனைக் குழுவில் இடம்பெற்று பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## இறுதி சுற்று வாய்ப்பில் நீடிக்கிறது கொல்கத்தா!

சன்ரைசர்ஸ் அணியை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கான போட்டியில் தொடர்ந்து நீடிக்கிறது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

ஐபிஎல் தொடரின் 61ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் நேற்று முன்தினம் இரவு மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா துடுப்பாட்டத்தை முதலில் தேர்வு செய்ய அதன்படி, வெங்கடேஷ் ஐயர், ரஹானே ஜோடி தொடக்கம் கொடுத்தது. 2 ஓவர்கள் வரைகூட இவர்கள் இணை தாக்குபிடிக்க வில்லை. 7 ஓட்டங்களில் வெங்கடேஷ் ஐயர் முதல் விக்கெட்டாக நடையைக் கட்ட, ரஹானே 28 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து, நிதிஷ் ராணா 26 ஓட்டங்களும், ஷ்ரேயாஸ் ஐயர் 15 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

எனினும், சாம் பில்லிங்ஸ் மற்றும் அந்த்ரே ரஸல் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் கொல்கத்தா அணியின் ஓட்டவீதம் உயர்ந்துகொண்டே சென்றது. ரஸல் இறுதி ஓவரில் தனது அதிரடியை வெளிப்படுத்த நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்கள் சேர்ந்தது கொல்கத்தா அணி. ரஸல் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்து 49 ஓட்டங்களும், பில்லிங்ஸ் 34 ஓட்டங்களும் எடுத்தார். ஹைதராபாத் தரப்பில் உம்ரான் மலிக் மூன்று விக்கெட்டை வீழ்த்தினார்.

தொடர்ந்து 178 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய ஹைதராபாத் அணியின் முக்கிய துடுப்பாட்டவீரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறினர். அணித் தலைவர் கேன் வில்லியம்சன், பவர் பிளே வரைகூட நிலைக்கவில்லை.

அவரும், அவருக்கு அடுத்து வந்த ராகுல் திரிபாதியும் தலா 9 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஆனால், மறுமுனையில் இருந்த அபிஷேக் சர்மா அதிரடியாக விளையாடி 43 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். வருண் சக்கரவர்த்தி பந்துவீச்சில் அவரும் ஆட்டமிழக்க ஹைதராபாத் அணி தடுமாறியது.

அய்டன் மார்க்ரம் மட்டும் அடுத்துவந்த வீரர்களில் ஓரளவு ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவரும் ஆட்டமிழந்தார். இதன்பின் பின்வரிசை வீரர்கள் மளமளவென விக்கெட்களை பறிகொடுத்தனர். இதனால் 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 123 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது சன்ரைசர்ஸ் அணி.

துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட ரஸல் பந்துவீச்சிலும், மூன்று விக்கெட் வீழ்த்தி, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அவருடன் ரிம் சவுதி 2 விக்கெட் எடுத்து அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார்.

54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற கொல்கத்தா அணி 6ஆவது வெற்றியை பதிவுசெய்து இறுதி சுற்றுக்கான வாய்ப்பில் தொடர்ந்து நீடிக்கிறது.



## எங்கள் திறமைக்கேற்ப நாம் விளையாடவில்லை!

மும்பை, மே 16

ஐ. பி. எல். தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் திறமைக்கேற்ப நாங்கள் விளையாட வில்லை என பெங்களூர் அணியின் தலைவர் டூ பிளசிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் வெள்ளிக்கிழமை இரவு பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி தோல்வியடைந்தது. 210 ஓட்டங்கள் இலக்கை துரத்திய பெங்களூர் அணியினால் 155 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

13 போட்டிகளில் விளையாடிய பெங்களூர் அணி 7 வெற்றி, 6 தோல்விகளுடன் 14 புள்ளிகள் பெற்றுள்ளது. இறுதி சுற்றுக்கு முன்னேற வேண்டுமானால் வரும் வியாழக்கிழமை நடைபெறும் தனது கடைசி போட்டியில் குஜராத் அணியை வீழ்த்தியாக வேண்டும் என்ற நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது.

போட்டி முடிவடைந்ததும் பெங்களூர் அணியின் தலைவர் டூ பிளெசிஸ் கூறும்போது, “பெயர்ஸ்ரோ அதிரடியாக ஆட்டத்தை தொடங்கிய விதம் எங்கள் பந்து வீச்சாளர்களை மிகவும் அழுத்தத்திற்கு உள்ளாக்கியது. ஆட்டத்தில் இருந்து சற்று நாம் பின்வாங்கியதாகவே உணர்ந்தேன்.

210 ஓட்டங்கள் என்பது இந்த ஆடுகளத்தில் சராசரி இலக்குத்தான். ஆடுகளம் அருமையாக இருந்தது. இதுபோன்ற இலக்கை துரத்தும் போது கொத்துகொத்தாக விக்கெட்களை இழக்காமல் இருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எங்களுக்கு அது நிகழ்ந்தது.

விராட் கோலியை பொறுத்தவரை ஆட்டமிழக்கக்கூடிய ஒவ்வொரு வழியும் அவருக்கு நடக்கிறது. மோசமான காலகட்டங்கள் அனைவருக்குமே ஏற்படும். அதை அவர், கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். இந்த இரவு எங்களுக்கு சிறப்பானதாக அமையவில்லை - என்றார். (ஐ)

## பெங்களூரை பந்தாடியது பஞ்சாப் கிங்ஸ் அணி!



ஐ. பி. எல். தொடரின் 60ஆவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றிகண்டுள்ளது பஞ்சாப் கிங்ஸ்.

ஐ. பி. எல். தொடரின் லீக் போட்டிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன. ஒவ்வொரு அணிகளும் இறுதிச் சுற்று பட்டியலில் இடம்பிடிக்க போட்டி போட்டு வருகின்றன. வெள்ளிக்கிழமை இரவு நடந்த 60ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி, துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி. பெயர்ஸ்ரோ மற்றும் ஷிகர் தவான் இருவரும் அதிரடியான தொடக்கம் கொடுத்தனர். பவர் பிளே ஓவர்களை சரியாக பயன்படுத்திய இருவரும் 4ஆவது ஓவர் முடிவில் 50 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பெயர்ஸ்ரோ 66 ஓட்டங்கள் எடுத்தார். அதேபோல் சகலதுறை வீரர் லியாம் லிவிங்ஸ்ரன் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித்தார். அவரின் 70 ஓட்டங்கள் உதவியுடன் பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்கள் குவித்தது. பெங்களூர் தரப்பில் ஹர்ஷல் பட்டேல் நான்கு விக்கெட்களும், ஹஸரங்கா 2 விக்கெட்களும் எடுத்தனர்.

பெரிய இலக்கை நோக்கி களமிறங்கிய பெங்களூர் அணிக்கு கோலி, டூ பிளசிஸ் இணை அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால், நீண்ட நேரம் இருவரும் நிலைக்க தவறினர். கோலி 20 ஓட்டங்களுக்கும், அவரை தொடர்ந்து டூ பிளசிஸ் 10 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்து நடையை கட்டினர். மஹிபால் 6 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்பின் சில ஓவர்கள் மக்ஸ்வெல் மற்றும் ரஜத் படிதார் இருவரும் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி னர். ஆனால், இவர்கள் கூட்டணியை ராகுல் சஹார் பிரித்தார்.

3 பந்துகள் இடைவெளியில் ரஜத் படிதார் மற்றும் மக்ஸ்வெல் இருவரும் தங்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர். இதன்பின் வந்தவர்கள் யாரும் சோபிக்கவில்லை. சொற்ப ஓட்டங்களுடன் சீரான இடைவெளியில் தங்கள் விக்கெட்டை இழந்தனர்.

இதனால், 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது பெங்களூர்.

பஞ்சாப் தரப்பில் ரபடா 3 விக்கெட், ரிஷி தவான், ராகுல் சஹார் தலா இரண்டு விக்கெட் எடுத்து அணியின் வெற்றிக்கு கைகொடுத்தனர்.

# மலையக மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவை!

## இ. தொ. கா. அறிக்கை

நுவரெலியா, மே 16

**நாட்டில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்ற இக்கால கட்டத்தில் மலையக சமூகம் கட்டுக்கோப்பாகவும், ஒற்றுமையாகவும் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

பொருளாதார நெருக்கடி என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே அமைந்திருந்தது. எனினும், மலையக பெருந்தோட்ட மக்கள் இன்று பொருளாதார நெருக்கடிகளையும், பல்வேறு பிரச்னைகளையும் எதிர்நோக்குகின்றதை காண்கின்றோம்.

கட்சி, தொழில்சங்க பேதம் பார்த்து நெருக்கடிகள் வரவில்லை. தற்போது நாட்டில் பல அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றுவரும் இந்நிலையில் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் நாட்டினதும் எமது மலையக சமூகத்தினதும் நெருக்கடிகள் தீர்க்கப்பட்டால் அதை அனைவருமே வரவேற்க வேண்டும்.

ஏனென்றால், அதுதான் தற்போதைய தேவையாக உள்ளது. உதவிகளும், நிவாரணங்களும் கிடைக்கும் போது கட்சி, தொழிற்சங்க பேதங்களை முன்வைத்து அதை விமர்சிப்பதும் நிராகரிப்பதும் இன்றைய சூழ்நிலையில் புத்திசாலித்தனமாகாது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடந்த 83 வருடங்களாக மக்கள் நலனிலும் உயர்விலும் அக்கறை காட்டி வந்த பாரிய அமைப்பாகும்.

இதுவரையிலும் மக்களின் பிரச்னைகளை தீர்த்து வைக்கும் தரப்பினருடன் மாத்திரமே நாம் இணைந்து பயணித்திருக்



கின்றோம். அதுவே எமது இலட்சியமாகும். மக்களின் பிரச்னைகள் என்பது அவர்களின் பாதுகாப்போடும் இருப்போடும் தொடர்புபட்டதாகும். அதை மக்கள் முதலில் புரிந்து கொள்ளல் அவசியம்.

அந்த மக்களின் பிரதிநிதிகளான எம் மக்களுக்கும் ஏனைய கட்சிகள், தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகளுக்கும் இப்போதைய காலகட்டத்தில் ஒரு பெரும் பொறுப்பு இருக்கின்றது. ஒரே மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நாம் அம்மக்களுக்கு நிலவுகின்றன ஒரே பிரச்னைகளையே தீர்ப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றோம். கட்சி ,தொழில் சங்க ரீதியாக எமக்குள் கொள்கை மற்றும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் மக்களின் பிரச்னைகள் ஒன்றே என்பதை நான் ஏனைய தரப்பினருக்கு வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே மக்களுக்கிடையே அரசியல் ரீதியான பிரிவினைகளை உருவாக்க எவரும் முயற்சி செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தேசிய ரீதியாக பல கட்சிகள் தமது தரப்பு நிலைப்பாடுகளை முன்வைத்து வருகின்றனர். எமது மக்கள் குறித்து இ.தொ.காவுக்கு கரிசனை உள்ளது.

முதலில் நாம் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெற வேண்டியுள்ளது. அந்த நிவாரணங்களை பெற்றுத் தருவதற்கு இந்தியா உட்பட பல நாடுகள் முன்வந்துள்ளன. அதற்கு அடுத்த கட்டமாகவே நாம் அரசியல் ரீதியான மீட்சிக்கான வழிவகைகளை ஆராய்ந்து பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்த முடிவுகள் எப்போதும் எமது மக்களுக்கு சாதகமாகவே இருக்கும் அதேவேளை இ.தொ. காவின், மக்கள் கொள்கைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானங்களாக இருக்கும். ஆகவே அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பது குறித்து நாம் அவதானம் செலுத்தி வருகின்றோம். அது வரை எமது கரங்களை பலப்படுத்தும் முகமாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் கட்சி, தொழிற்சங்க பேதங்களை ஒரு பக்கம் வைத்து விட்டு பெருந்தோட்ட மக்கள் கட்டுக்கோப்பாகவும், ஒற்றுமையாகவும் அமைதியாகவும் நடந்துக் கொள்ளவேண்டியது எமது தார்மீக கடமையாகும் - என்றுள்ளது. (ஐ)

# நிதியமைச்சு எனக்கு வேண்டவே வேண்டாம்!

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, மே 16

புதிய அரசாங்கத்தில் நிதி அமைச்சுப் பொறுப்பை ஏற்கப் போவதில்லை என்று முன்னாள் நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரி ஜனாதிபதியிடம் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு தான் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் எனினும் நிதி அமைச்சை பொறுப்பேற்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (கே)

# கொழும்பு கண்காணிப்பு பணியில் இராணுவத்தின் விசேட படையணி

கொழும்பு, மே 16

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் கொழும்பு நகரை அண்மித்தப் பகுதிகளில் இராணுவத்தினர் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், பாதுகாப்பு அமைச்சின் பூரண மேற்பார்வையின் கீழ் இலங்கை இராணுவத்தை முதன்மைப்படுத்தி முப்படையினர், பொலிஸாருக்கு ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர் என்று இராணுவத்தின் ஊடகப்பிரவு தெரிவித்துள்ளது.

நாட்டில், நீதி மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் பொதுமக்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டும் இராணுவத்தினர் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் அமைதியான சூழலை மேலும் நிலைநாட்டுவதற்காக இராணுவத்தின் விசேட படையணியின் மோட்டார் கண்காணிப்புப் படை மற்றும் இராணுவ கவச வாகனங்களை பயன்படுத்தி கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் ரோந்தில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன், திடீர் வீதி தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். கொழும்பின் பிரதான வீதிகளில் இராணுவத்தினர் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. (கே)

# வன்முறைகளுடன் தொடர்பு; 230 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, மே 16

கடந்த 9ஆம் திகதி முதல் நாட்டின் பல பாகங்களில் நடந்த வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு சட்டத்தை மீறியமை, நபர்களைத் தாக்கியமை, பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 68 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# பிரதி சபாநாயகராக பெண் நியமனம்; பிரதமரின் யோசனைக்கு வரவேற்பு!

கொழும்பு, மே 16

பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகராக பெண் ஒருவரை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனை பொருத்தமானது என சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்த இது ஒரு காரணமாக அமையும் என அந்த அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏழாவது பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆறு வீதத்துக்கும் குறைவாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் மற்றும் தேசியப்பட்டியல் ஆசனங்களை வழங்குவதில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் பிரதான கட்சிகளின் தலைவர்கள் அக்கறை காட்டாத காரணத்தால் இம்முறை பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பதின்மூன்றாக மட்டுப்படுத்தப்பட்ட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு தயாரிக்கும் நடவடிக்கையில் பெண்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற சட்டம் இருந்த நிலையில், தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் 23 சதவீத பெண் பிரதிநிதித்துவம் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தை கருத்தில் கொள்ளும் போது, இந்த நிலைமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. எனவே, இலங்கையின் சட்டமியற்றும் செயற்பாட்டில் பெண்களுக்கு கணிசமான பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏனைய கட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# எரிக்கப்பட்ட வாகனங்கள் பேர வாவி அருகே வரிசை!

கொழும்பு, மே 16

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் கடந்த 9ஆம் திகதி தனியார் பஸ்கள் உள்ளிட்ட பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்ட வாகனங்கள் கொழும்பு பேர வாவி அருகே வரிசையான நிறுத்தப்பட்டுள்ளன.

பஸ்கள், கார்கள், வான்கள், லொறிகள் என சுமார் 50இற்கும் மேற்பட்ட வாகனங்கள் இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நிறுத்தப்பட்ட வாகனங்களில் பல வாகனங்கள் மீள் புதுப்பிக்க முடியாதளவு சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், அலரி மாளிகையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்துக்கு வாடகை அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்ட தனியார் பஸ்களில் சுமார் 40 பஸ்கள் மீளப் புதுப்பிக்க முடியாத அளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பஸ்களின் உதிரிப்பாகங்களும் திருடப்பட்டுள் ளன என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனவே, அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளுக்கு இனி தனியார் பஸ்களை வழங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கே)

## நிபந்தனைகளை...

னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் பிரதமர் ரணில் உட்பட எவரும் கேட்கவுமில்லை. நானும் அவர்களுடன் பேசவுமில்லை. இந்த விடயம் குறித்து எனது சகோதர கட்சிகளுடனும் பேசி முடிவு எடுக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விக்னேஸ்வரன் எம். பி. ஆதரவளிப்பதாகக் கூறியிருந்தார். இந்நிலையில், அவர் அமைச்சு பதவி பெறத் தயாராகவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின. இந்த விடயம் தொடர்பில் அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்து விளக்கமளித்தார். இதன்போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழரின் பிரச்னை வேறு, தேசிய அளவில் எங்கள் பிரச்னை தீர்க்கப்படவேண்டிய அவசியம் இருப்பதால் நாங்கள் அரசுடன் இணைந்து பயணிப்பதில்லை. ஆனால், இக்கட்டான நிலையில் ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவருக்கு ஆதரவளிக்க முடியும் அல்லது பரிசீலிக்க முடியுமென நான் கூறினேன்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், வடக்கு, கிழக்கில் தொல்பொருள் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும், வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தை அரைவாசியாகவாவது குறைக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு செவி சாய்த்து ஒரு மாதம் அல்லது குறிப்பிட்ட காலத்துக்குள் நடவடிக்கை எடுத்தால் நான் அவருடன் இணைந்து பயணிப்பது குறித்து பரிசீலிக்கலாம் என்றே கூறினேன்.

எனது நிபந்தனைகள் கூறப்படாமல் அமைச்சவையில் இடம்பெறப் போகிறேன் என செய்தி பரப்பப்பட்டது. எனது கட்சியினருடன், சகோதர கட்சியினருடன் பேசி இந்த முடிவை நான் எடுக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு எனது முடிவில் ஏற்புதல் இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால், இதை எவ்வாறு தமிழ் மக்களின் அரசியல் தீர்வுடன் சம்பந்தபடுத்த முடியும் என்பதை சிந்திக்க வேண்டும் என கட்சியினர் கூறினர் அதை ஏற்கிறேன் - என்றார். (ஐ)

## முள்ளிவாய்க்...

நன்கறியப்பட்ட அரசியல் காரணங்களால் பிரதமர் பதவிக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவால் நெருக்கடி நிலைமையை வெற்றிகரமாக கையாள முடியும் என்ற நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பு அரசியல் அரங்கில் மேலோங்கத் தொடங்கியுள்ளது.

இதேநேரத்தில், காலிமுகத்திடலில் தொடர்ந்து நடத்தப்படும் ஜனநாயகப் போராட்டத்துக்கு அரசாங்கத்தால் தடை எதுவும் இருக்க மாட்டாது என்ற புதிய பிரதமரின் உடனடியான அறிவிப்பு வரவேற்புக்குரியது என்பதற்கு அப்பால், அனுபவம் நிறைந்த அரசியல் ஆளுமையின் யதார்த்தபூர்வமான அணுகுமுறையாக அது மதிப்பிடப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி நாளை மறுநாள் 18ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ள நிலையில், இந்த நிகழ்வுக்கு எதிராகக் கடந்த முறையைப் போலவே கெடுபிடிகளும் முட்டுக்கட்டைகளும் படைகளால் உருவாக்கப்பட்டு வருவது புதிய பிரதமரின் ஆரோக்கியமான அரசியல் அணுகுமுறைக்கு ஓர் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடந்த காலத்தில் சில முக்கியமான சந்தர்ப்பங்களில் தமிழர் தரப்பில் வெளிப்படுத்தப்பட்ட ஆதரவும் அனுசரணையும் நன்கறியப்பட்டவை. ஆயினும், அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் சில கசப்பான ஏமாற்றங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த போதிலும், அவர் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்கள் காத்திரமாக நிலைகொண்டதில்லை.

இந்தப் பின்னணியில் காலிமுகத்திடலுக்கு ஒரு நீதி, முள்ளிவாய்க்காலுக்கு வேறு நீதி என்ற பாரபட்சமான பார்வை அவரிடம் இருக்க மாட்டாது என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே, நீதியான அணுகுமுறையை முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி விடயத்தில் கையாள்வதற்கு அவர் உடனடியாக முன்வரவேண்டும் என்று நாம் கோருகின்றோம். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது புதிய பிரதமருக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கும். அதில், அவர் தேறுவதோ அல்லது தவறுவதோ தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் -என்றுள்ளது. (ஐ)

## போரில் இறந்த...

இதேவேளை, இறந்தவர்களின் ஆத்மாக்களை வைத்து நினைவேந்தல் நிகழ்வுகளில் எவரும் அரசியல் செய்யக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும்முகமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகின்றது. நினைவேந்தல் வாரத்தின் இறுதிநாளான நாளை மறுதினம் புதன்கிழமை நினைவேந்தலை உணர்வுரீதியாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நல்லாட்சி அரசின் காலத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் கடந்த இரு வருடங்கள் நினைவேந்தல் நிகழ்வுகள் தடை செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கப்படுமா என்று ஊடகங்கள் எழுப்பிய வினாவுக்கு பதிலளித்த பிரதமர், "கடந்த நல்லாட்சியில் சகல நினைவேந்தல் நிகழ்வுகளையும் நடத்த நாம் அனுமதி வழங்கியிருந்தோம். அதேபோல் இனியும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க நாம் அனுமதிக்கமாட்டோம். தெற்குக்கு ஒரு நீதி, வடக்குக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. போரில் இறந்தவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் - என்றும் கூறினார்.

## கொழும்பில்...

அவர்கள் தம்முடன், தேசிய மற்றும் பொலிஸ் அடையாள அட்டைகள், குறிப்பேடுகள், மழையங்கிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள் மற்றும் உத்தியோகபூர்வ கொட்டன் தடிகளைகொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை கூடவுள்ள நிலையிலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் ரோந்து பணியை அதிகரிக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட சுற்றறிக்கை பொலிஸ்மா அதிபரால் அனுப்பப்பட்டுள்ளது.

## டீசலுடன்...

டீசல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரா லயம் ருவிட்டர் பதிவு மூலம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரையில் 400,000 மெற்றிக் தொன் எரிபொருள் இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சரத் பொன்சேகாவை பிரதமராக நியமிக்க விரும்பினார் ஜனாதிபதி!

கொழும்பு, மே 16

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவுக்கு பிரதமர் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பினார். ஆனால், பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தோரின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டதாக சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து அந்த வார இதழ் மேலும் விபரித்தவை வருமாறு,

வெற்றிடமாகவுள்ள பிரதமர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்க அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவசரமாக ஒருவர் தேவைப்பட்டார். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், அவரிடம் இருந்து சாதகமான பதில் வரவில்லை. இதன்படி, பிரதமர் பதவிக்கு முதலில் போட்டியிட்டவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே உள்ளிட்ட தரப்பினரால் இந்த யோசனை ஜனாதிபதிக்கு சொல்லப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரது கணவர் மேஜர் சேனக டி சில்வா சரத் பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையே இதற்குக் காரணம்.

எவ்வாறாயினும், நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில நட்புறவை பேணி வருகிறார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாக இறுதியாக சரத் பொன்சேகாவுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை அரச தலைவரின் மாளிகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. பாராளுமன்ற பெரும்பான்மையை உருவாக்க முடியுமா என்று கோட்டாபய ராஜபக்ஷ பொன்சேகாவிடம் கேட்டாரெனவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த கலந்துரையாடல் வெளியானதை அடுத்து சரத் பொன்சேகா கடந்த வியாழக்கிழமை சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டார். காலிமுகத்திடல் செயல்பாட்டாளர்களுடன் கலந்தாலோசிக்காமல் ராஜபக்ஷ நெருக்கடியை தீர்ப்பதில் நான் ஒரு போதும் பங்காளியாக இருந்ததில்லை என்று அவர் அதில் கூறியிருந்தார்.

எது எப்படி இருந்த போதிலும் சரத் பொன்சேகாவுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது. இதற்கு பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பல்வேறு தரப்பினரும் ஆட்சேபனைகளை வெளியிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வன்முறையாளர்கள இனங்காண பொதுமக்களை நாடும் பொலிஸ்!

கொழும்பு, மே 16

மே மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் கொள்ளுப்பிட்டி மற்றும் காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நபர்களை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

இந்த நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால், 071 859 4901, 071 859 4915, 071 859 2087, 071 859 4942, 071 232 0145, 011 242 2176 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தெரிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

## கோட்டா கோ...

பட்டது என்று விரிவான கட்டுரையாக எழுதப்பட்டது.

அதில், மஹிந்த ஆதரவு குண்டர்கள் 'கோட்டா கோ கம' போராட்ட களத்துக்குள் புகுந்து அனைவரின் மீது தாக்குதல்களை நடத்தினர். கூடாரங்களை பிடுங்கி குவித்து தீ வைத்து எரித்தனர். ஓவியங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதைப் போன்று 'கோட்டா கோ கம' நூலகமும் எரிக்கப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரணில் அரசு...

யுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும், கட்சி உறுப்பினர்கள் ரணில் விக்கிரசிங்கவுடன் சந்திப்பு ஒன்றுக்கு திகதி, நேரம் ஒன்றை கோரியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன. இதேசமயம், சுயாதீனமாக இயங்கும் ஏனைய 10 கட்சிகளும் ரணில் தலைமையிலான அரசுக்கு ஆதரவளிப்பது குறித்து பேசி வருகின்றன என்று அறிய வருகின்றது. (ஐ)

## மஹிந்த...

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமான வெளிநாட்டு இராஜதந்திரிகள் அவருக்கு இந்த அழைப்பை விடுத்தனர்.

அத்துடன், அவருக்கு என்ன உதவிகள் தேவை என்றும் கேட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. நாட்டை விட்டு வெளியேறும் யோசனையை அவர் தனிப்பட்ட முறையில் நிராகரித்தார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## மே 18...

அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் தமிழ் செயல்பாட்டாளர்கள் விநியோகித்த துண்டுபிரசுரமே பெரும்பான்மை இனத்தவரால் கிழித்தெறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எரிவாயுவுடன்...

கப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று லிட்ரோ நிறுவனத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், மற்றைய கப்பல் எதிர்வரும் 19ஆம் திகதி - வியாழக்கிழமை நாட்டை வந்தடையும் என்று அறிய வருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தி வருகின்றார். இந்த நிதி கிடைத்ததும் 3 மாதங்களுக்கு தேவையான எரிவாயுவை கொள்வனவு செய்து சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சர்வ கட்சிகளின் ஒத்துழைப்பை பிரதமர் ரணில் பெறவேண்டும்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, மே 16

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் சர்வ கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலமாக சட்டத்தரணிகள் சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியமை முக்கியமான விடயம். எனினும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் அமைய வேண்டும்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தை மாற்றக் கூடிய ஓர் ஒன்றிணைந்த அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# யாழ். போதனாவில் குருதிக்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், மே 16

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தற்போது ஏ பிளஸ் வகை குருதிக்குத் தற்போது தட்டுப் பாடு நிலவுவதாக இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக அமுல்படுத்தப் பட்ட ஊரடங்கினால் கடந்த 8ஆம் திகதிக்குப் பின்னரான இரத்ததான முகாம் நிகழ்வுகள் இடை நிறுத்தப் பட்டன. இதனால், நேரடியாக இரத்த வங்கிப் பிரிவுக்கு வருகை தந்து இரத்ததானம் வழங்குபவர்களின் எண்ணிக் கையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில்

ஏனைய குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

எனவே, குருதிக் கொடையாளர்களை இரத்ததானம் வழங்க முன்வருமாறும், குருதிக் கொடையாளர்கள் 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# மின்வெட்டு இன்றும் இல்லை!

கொழும்பு, மே 16

இன்று திங்கட்கிழமையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

வெசாக் பூரணை தினமான நேற்றும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்க சுயாதீன எம். பிக்கள் தீர்மானம்!

## பிரதி சபாநாயகர் தெரிவில்

கொழும்பு, மே 16

பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகருக்கான தேர்வின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்னவை ஆதரிப்பதற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை கூடும் போது, முதல் விடயமாக பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெறும்.

இதன்போது ரோஹினி கவிரத்னவை பிரதி சபாநாயகர் பதவிக்குப் பெயரிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும், அந்தப் பதவிக்கு அஜித் ராஜபக்‌ஷவை களமிறக்குவதற்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் முடிவெடுத்துள்ளன.

இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை ஆதரிப்பதற்கு 11 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணி தீர்மானித்துள்ளது. (ஐ)

# போராட்டத்தை மழுங்கடிக்கவே புலிகள் மீளுருவாக்கக் கதை!

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

வவுனியா, மே 16

**அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை மழுங்கடிக்கவே புலிகள் மீளுருவாக்கம் என்ற விடயம் பேசப்படுகிறது என்று வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்லவம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். அத்துடன், மே18 நிகழ்வை சிங்கள மக்களும் நினைவேந்த வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற ரெலோ அமைப்பின் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் கிறிஸ்ரி குகராஜாவின் நினைவேந்தல் நிகழ்வின் பின்னர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் பாரிய அல்லலப்பட் டனர். மஹிந்த, கோட்டாபய அந்த மக்கள் மீது மோசமான வன் முறையை செய்துகாட்டினர். அந்த வலிகளை இந்த மாதத்தில் நாம் நினைவுகூருகின்றோம்.

இதே காலப்பகுதியில் சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப் படும் நிலை கோட்டா அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டை கொண்டு நடத்தும் திறமை அவர் களிடம் இருக்கவில்லை என்பது இன்று புலனாகின்றது. சிங்கள மக்களின் அந்த செயல்பாட்டில் நாங்களும் இணைந்துகொள்கின் றோம்.

அத்துடன், இழந்துபோன தமது உறவுகளுக்காக அஞ்சலி செய்யும் வாய்ப்பை எந்த தடைகளும் இல்லாமல் புதிய பிரதமர் ஏற்படுத்தித் தர வேண்டும். இந்த நிகழ்வில் சிங்கள மக்களும் கலந்துகொள்ள வேண் டும் - போராட்டக்காரர்கள் கலந்து கொள்ளவேண்டும். உயிரிழந்த எமது மக்களுக்கு அவர்களும் அஞ்சலி செலுத்தவேண்டும்.

இதேவேளை புலிகளின் மீளுரு வாக்கம் என்ற போர்வையில் இந்த போராட்டத்தை மழுங்கடிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று முன்னரே சொல்லியிருந் தேன். தற்போது இந்து பத்திரிகை யில் சொல்லப்பட்டுள்ள விட யத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்கள் துக்கத்தை அனுபவித்து வரும் இந்த சூழலில் இப்படியான செய்திகள் வருவதை ஏற்கமுடி யாது. இது எமதுமக்களின் அஞ் சலியை தடைசெய்வதற்கான உத்தி யாகவே பார்க்கின்றேன்.

அத்துடன், புதிய பிரதமருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான விடயத்தில் பாராளுமன்ற உறுப்பி னர் விக்னேஸ்வரன் நிதானமாக தனது கருத்தை சொல்லியிருக்க வேண்டும் என்பது எனது கருத்து. முதலமைச்சராக இருந்தவர், மக் களின் அதிக வாக்குகளை பெற்றவர் உடனடியாக அப்படியான கருத்தை ஏன் சொன்னார் என்று தெரிய வில்லை. அவர் நிதானமாக கருத்தை சொல்லியிருக்கலாம்.

இந்த சூழலில் பாராளுமன்றத் தில் இருக்கும் அனைத்து கட்சி களும் இணைந்து முடிவை எடுக் கும் சந்தர்ப்பம் தொடர்பாக நாம் பரிசீலிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் இனவழிப்பு பாண்டியன்குளத்தில் நினைவேந்தல்!

மல்லாவி, மே 16

“முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதைகளை எம் அடுத்த தலைமுறைக்கு கடத்துவோம்”, என்ற தொனிப் பொருளில் முள்ளிவாய்கால் அவல நிலை குறித்து அதனை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங் கும் நிகழ்வும், முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவு களுக்காக நினைவு அஞ்சலியும் நேற்று மாந்தை கிழக்கு ஒட்டங்குளம் விநாயகபுரம் பகுதியில் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் மக்கள் பெற்ற துன்பங்களையும் அவர்கள் இழந்த இழப்புகளையும் நினைவுகூரும் முக மாகவும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தகாலப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இங்கு ஒன்று கூடியவர்கள் கஞ்சியை அந்த இடத்தில் காய்ச்சியதுடன் அதனை சிரட்டையில் பொதுமக்கள் என பலருக்கும் பரிமாறியிருந்தனர்.

நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர், பிரதேசபை உறுப்பினர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# மருந்துப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சின் செயலர்

கொழும்ப, மே 16

இருதய நோயாளர்களுக்கான மருந்துப் பொருட்கள், சத்திர சிகிச் சைக்கான உபகரணங்கள் உள்ளிட்ட பல மருந்துகளுக்கு கடும் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க தெரிவித்தார்.

சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்னைகளை ஆராய்வதற்காக ஐக் கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தலைமையில் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழு பிரதமர் அலுவலகத்தில் கூடி கலந் துரையாடலில் ஈடுபட்டது.

இதன்போதே சுகாதார அமைச் சின் செயலாளர் மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

நோயாளர்களுக்கான மருந்து கள், சத்திரசிகிச்சை உபகரணங்க ளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. நோயாளர்களுக்குத் தேவையான உணவு வழங்குபவர்களுக்கு நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்பட வில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகா தார அமைச்சின் செயலாளர் உட் பட அமைச்சின் அதிகாரிகள், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருந்து உற்பத்தி நிறுவனம், சுதேச மருந்து மற்றும் உபகரண உற்பத்தி யாளர்கள் சங்கங்கள், தனியார் வைத்தியசாலை சங்கங்கள் மற்றும் மருந்து இறக்குமதியாளர் சங்கங் களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் கலந்துகொண்ட னர். (ஐ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- காவித்தலைவன்,காஞ்சனா-03
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா

**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

